# ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்)

## முன்னுரை

*நஹ்மதுஹூ வ நுஸல்லி அலா ரஸூலிஹில் கரீம்*

'இரண்டாம் உமர்' என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பெற்ற ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களைப் பற்றி முன்னுரையாக நான் என்ன கூறுவது? இறையச்சத்தின் உச்சியில் வாழ்ந்த அப்பெரியாரின் பெயரை உச்சரிக்கக் கூட எனக்குத் தகுதியில்லையே!

உமைய்யாக் கிலாஃபத்தின் கலீஃபாவாகத் திகழ்ந்த அவர்கள் இஸ்லாத்தில் தோன்றிய முதல் முஜத்தித் (மார்க்கத்திற்குப் புத்துயிரளிப்பவர்) என்று வரலாற்றாசிரியர்கள் கணிக்கின்றார்கள்.

வாழ்வின் முற்பகுதியினை ஆடம்பரத்தில் கழித்த அவர்களோ அதன் பிற்பகுதியினை எவ்வாறு கழித்தார்கள் என்பதனை எவராலும் விவரிக்க இயலாது.

அவர்களின் மனைவி ஃபாத்திமா, தம் கணவரைப் பற்றிக் கூறும் பொழுது,

''என் கணவரைக் காட்டினும் உளூவிலும், தொழுகையிலும் அதிகம் ஈடுபாடுடையவர்கள் பலர் இருக்கலாம். எனினும் அவர்களைக்காட்டினும் இறைவனுக்கு அஞ்சக் கூடியவர் வேறெவரையும் நான் கண்டதில்லை. அவர்கள் கலீஃபா ஆன பின்னர் ஜனாபத்திற்காகக் குளிக்கவேண்டிய நிலை ஏற்படவேயில்லை.'' என்று கூறினார்.

கலீஃபா அவர்களைப்பற்றி வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும் பொழுது, "ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபா ஆனவுடன் ஹஜ்ரத் உமர் இப்னுல் கத்தாப் (ரலி), ஹஜ்ரத் ஹஸன் பஸரீ (ரஹ்) ஆகியோரர் போன்று மாறி விட்டார்கள்" என்று கூறுகின்றனர்.

கல்வியில் கரைகண்ட பேரறிஞராய், ஆத்ம ஞானியாய், அல்லாஹ்வின் உண்மையான அடியாரராய்த் திகழ்ந்த அப்பெரியாரைப் பற்றி நான் எழுத முனைந்தது நான் பெற்ற நற்பேறேயாகும். புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது.

இந்நூலில் அப்பெரியாரைப் பற்றி நான் எனக்குக் கிடைத்த ஆதாரங்களைவைத்து வரலாற்றைப் புனைந்துள்ளேன்; பின்னி பிணைத்துள்ளேன். இதனைப் படிக்கும் சகோதர அன்பர்கள், அப்பெரியாரின் வாழ்க்கை முறையினைப் பின்பற்றி நடக்க முன்வரவேண்டும். அதுவே இந் நூலால் ஏற்படும் பயனாகும். அஃதன்றி இதனை ஓர் கற்பனைக் கதைப்போன்றெண்ணி படித்து விட்டுச் செல்வது பயனற்றதாய் முடியும். ஏனெனில் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை உலக முஸ்லிம்களுக்கு ஓர் முன்மாதிரி என்பதே அதற்குக் காரணமாகும். அத்தகைய அழகிய வாழ்க்கை முறையினை அல்லாஹ் நம்மனைவருக்கும் அமைத்துத் தருவானாக! ஆமீன்.

# இந்நூலின் உள்ளே...


1. முன்னோர்கள்
2. தந்தை வழிமுன்னோர்கள்
3. பிறப்பும், இளமையும்
4. திருமணம்
5. மதீனாவின் ஆளுநர் பதவி
6. கலீஃபா சுலைமானின் வாரிசு
7. கலீஃபாவாக பதவியேற்றல்
8. மார்க்க அறிஞர்களின் ஆலோசனை
9. ஹஜ்ரத் ஹசன் பஸரீ (ரஹ்)யின் உபதேசம்
10. அரசியல் சீர்திருத்தங்கள்
11. எளிமையின் துவக்கம்
12. காரிஜிகளின் மகிழ்ச்சியும் உமைய்யாக்களின் எதிர்ப்பும்
13. பெரியார்களின் தொடர்பு
14. நிர்வாகத் திறமை
15. சொற்பொழிவு
16. கலீஃபாவின் மாளிகை ?
17. கலீஃபாவின் ஏழ்மை!
18. பசியால் வாடிய கலீஃபாவின் மக்கள்!
19. அறிவுள்ள மகன்
20. பிள்ளைகளுக்கு நல்லுரை

21. இறையச்சமும் அழுகையும்

22. கலீஃபாவின் மனைவி ஃபாத்திமா

23. பேணுதலுக்கோர் இலக்கணம்

24. ஆத்ம ஞானி

25. அரசனும், ஆண்டியும் சமமே

26. வாழ்வின் இறுதி

27. இறைநேசச் செல்வரின் மரணம்

28. உலக மக்களின் வேதனை

29. முஜத்தித்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

## முன்னோர்கள்

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமைத் தோழரும், குலஃபாயே ராஷிதீன்களில் (நேர்வழி பெற்ற கலீஃபாக்களில்) இரண்டாமவரும், இஸ்லாத்தின் இரண்டாம் ஸ்தாபகர் என்று மேலை நாட்டினரால் போற்றப்படுபவருமான ஹஜ்ரத் உமர் இப்னுல் கத்தாப் (ரலி) அவர்களின் பேத்தியின் மகனுவார்.

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள், கலீஃபாவாக இருந்து ஆட்சி செய்தபோது, மிக்க எளிய இயல்புள்ளவராகவும், ஏழைகளைக் கண்காணிப்பதிலும் அவர்களுக்கு உதவி செய்வதிலும் பெருவிருப்பம் உடையவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

ஒருமுறை மதீனாவில் உணவிற்கு கடும் பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது கலீஃபா உமர் (ரலி) அவர்கள் தானியங்களை மூட்டையாகக் கட்டி, அவற்றைத் தம் முதுகிற் சுமந்துச் சென்று மக்களுக்கு விநியோகம் செய்தார்கள்.

மற்றொரு முறை ஒரு பெண் பசியால் வாடியதைக் கேள்வியுற்ற அவர்கள் மாவு மூட்டையை சுமந்து சென்றார்கள். மூட்டை சுமந்த மன்னரை உலக வரலாற்றில் எங்கேனும் காண முடியுமா ? இஸ்லாம் உலக மன்னர்களுக்கு போதித்த முன்மாதிரியாகும் இது !

உமர் (ரலி) அவர்கள் மாவு சுமந்துச் சென்றபோது ஒரு மனிதர் அவர்களை அண்மி, அம்மூட்டையைத்தானே சுமந்து வருவதாகக் கூறிய பொழுது, அவர்கள் அம் மனிதரை நோக்கி,

''இவ்வுலகில் வேண்டுமாயின் நீர் என்னுடைய சுமையைச் சுமக்கலாம். மறுமையில் என்னுடைய சுமையைச் சுமப்பவர் எவர்?'' என்று கேட்டனர்.

ஒருமுறை அரசாங்கத்திற்கு உரிய ஒட்டகம் ஒன்று காணமற் போய்விட்டது. கலீஃபா உமர் (ரலி) அவர்களே அதனைத்தேடிப் புறப்பட்டார்கள். அப்பொழுது ஒரு மனிதர் அவர்களை நோக்கி,

''இதற்குக்கூட தாங்கள் தாமா போகவேண்டும். அடிமை ஒருவனை அனுப்பின் அவன் அதனைத் தேடிக் கண்டறிந்து கொண்டு வரமாட்டானா?'' என்று வினவியக்கால்,

''என்னைவிடச் சிறந்த அடிமை யார்?''

என்று அவர்கள் அம்மனிதரைப் பார்த்துக்கேட்டார்கள்.

கலீஃபா உமர் (ரலி) அவர்கள், தங்களின் ஆட்சிக் காலத்தில் இரவு வேளைகளில் நகர் வலம் வருவதை நீங்காத வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

வழக்கம் போல் ஒரு நாள் அவர்கள், இரவுப் பொழுதில், மதீனா நகரில் மாறுவேடம் பூண்டு சென்று கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஓர் இல்லத்தில் தாயும், மகளும் ஏதோ ஒரு பொருள் குறித்து விவாதம் செய்து கொண்டிருப்பது அவர்களின் செவிகளில் விழுந்தது. அப் பெண்கள், தம்மை கவனிக்காத வண்ணம் மறைந்து கொண்ட அவர்கள் தாய்—மகளின் உரையாடலைச் செவியுற்றார்கள்,

தாய் கூறினாள்:- ''மகளே! பாலில் சிறிது தண்ணீரைக் கலந்து விடு''



அதற்கு மகள், ''அன்னையே! அவ்வாறு செய்வது சரியல்ல. அச்செயலை நான் செய்ய மாட்டேன்'' என்று மறுத்துரைத்தாள்.

அப்பொழுது அன்னை மகளை நோக்கி, ''மகளே! நீ கலீஃபாவிற்கு அஞ்சுகிறாயா? அவர் தான் இங்கு இல்லையே!'' என்று கூற,

அதற்கு மகள், ''அன்னையே! தாங்கள் கூறுவது சரியல்ல. கலீஃபா இங்கு இல்லாவிடினும், அல்லாஹ் இருக்கிறானன்றோ! அவன் நாம் செய்யும் இப்பாவச் செயலைப் பார்த்துக் கொண்டு தானே இருப்பான்?'' என்று கூறினாள். அது கேட்ட தாய், அதற்கு மறுமொழியேதும் கூறாது பேசாமலிருந்தாள்.

தாய்—மகளின் இவ்வுரையாடல் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தை நெகிழ வைத்து விட்டது. அவர்களின் உள்ளம் அம்மகளின் இறையச்சத்தை வியந்து போற்றியது.

அடுத்து அவர்களின் நடவடிக்கை என்ன? பாலில் கலப்படம் செய்ய முயன்ற தாயை தண்டித்தார்களா?

தாயை அறிவுறுத்தி நேர்வழி நின்ற மகளைப் போற்றிப் புகழ்ந்தார்களா? பாராட்டி பரிசில்கள் தந்தார்களா?

எதுவும் இல்லை; வேறென்ன செய்தார்கள்? கலீஃபா உமர் (ரலி) அவர்கள், தமுடைய மகன் ஆஸிம் என்பவருக்கு, இறையச்சமுள்ள அப்பெண்ணை மணமுடித்து வைத்தார்கள்.

அப்பொழுது அவர்கள், தம் மகன் ஆஸிமை நோக்கி ''மகனே! இப்பெண்ணை ஏழை என்று எளிதாக எடை போட்டு விடாதே! அல்லாஹ் இவர் மூலமாக ஓர் நன் மகவைத் தருவான், அம்மகவு அரபு நாட்டை ஆளும் அதிபதியாக விளங்கும்''. என்று கூறி வாழ்த்தினார்கள். அவ்வண்ணமே பின்னர் நிகழ்ந்தது.

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின், மகன் ஆஸிமின் மகளுக்குப் பிறந்தவரே, ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள். உமைய்யாக்களின் கொடுங்கோன்மை உச்சக்கட்டத்தை எய்திய பொழுது, அல்லாஹ் (சுப்ஹானஹூதவஆலா) இறையச்சமுள்ள நாதாவாகிய அவர்களை உமைய்யாக்களின் கலீஃபாவாகப் பொறுப்பேற்கச் செய்து, முஸ்லிம்கள் மீது தனது பேரருளைச் சொரிந்தான்.

## தந்தை வழி முன்னோர்கள்

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் தாய் வழிப்பாட்டனார் ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்று படித்தோம்.

இனி, அவர்களின் தந்தை வழி முன்னோர்களைப் பார்ப்போம்.

அப்துஷ் ஷம்ஸின் மகன் உமைய்யாவிற்கு இரண்டு மகன்கள் பிறந்தனர். அவர்கள் ஹர்பு, அபுல் ஆஸ் ஆகியோராவர்.

அபுல் ஆஸுக்கு ஹகம் என்னும் மகன் பிறந்தார். ஹகமின் மகனே முதலாம் மர்வான்.

ஹர்பின் பேரர் ஹஜ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் உமையா கிலாஃபத்தை ஏற்படுத்தினார்கள். முஆவியா (ரலி) அரபு நாட்டை கி.பி. 661 முதல் 680 வரை ஆண்டார்கள்.

பின்னர் அவர்களின் மகன் எஜீது கி.பி. 680 முதல் 683 வரை ஆட்சி செய்தார். அவருடைய ஆட்சியின் பொழுதுதான் அண்ணல் நபி (சல்) அவர்களின் திருப்பேரர் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களும், அவர்களின் பரிசுத்தக் குடும்பத்தினரும், ஆதரவாளர்களும் கர்பலாவில் அக்கிரமமான முறையில் கொல்லப்பட்டார்கள்.

எஜீதுக்குப் பின்னர் அவரின் மகன் இரண்டாம் முஆவியா கி. பி. 683லிருந்து 684 வரை ஆட்சி புரிந்தார்.



அவருக்குப் பின்னர் அபுஸ் ஆஸின் பேரர் முதலாம் மர்வான் உமையா கிலாஃபத்தின் கலீஃபா ஆனார். அவர் கி. பி. 684 முதல் 685 வரை ஆட்சி செய்தார்.

பின்னர் அவரின் மகன் அப்துல் மலிக் கி. பி. 685 முதல் 705 வரை ஆட்சி செய்தார். அவரது ஆட்சியின் பொழுதுதான் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் என்ற கொடியவன் பஸ்ராவின் ஆளுநராக இருந்து அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தோழர்களையும், ஆன்மீக ஞானிகளையும், பொது மக்களையும் படாதபாடுபடுத்தினான். 1,20,000 பேர்களை அவன் கொன்றதாக வரலாறு கூறுகிறது. அப்துல் மலிக்கின் ஆட்சியில் கொடுங்கோன்மை தலைவிரித்தாடியது.

முதலாம் மர்வானுக்கு அப்துல் அஜீஸ் என்ற மற்றொரு மகனும் இருந்தார். அவரே ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் தந்தையாவார்.

## பிறப்பும் இளமையும்

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் மர்வானின் மகன் அப்துல் அஜீஸுக்கும், உமர் (ரலி) அவர்களின் பேத்திக்கும் திருமகனாய் ஹிஜ்ரி 62 ஆம் ஆண்டில், எகிப்திலுள்ள ஹல்வான் என்னுமிடத்தில் பிறந்தார்கள்.

அவர்களின் பிறப்பின் பொழுது, தந்தை அப்துல் அஜீஸ் (அப்துல் மலிக் இப்னு மர்வானின் தம்பி) எகிப்தின் ஆளுநராக இருந்தார். இருபது ஆண்டுகாலம் அப்பதவியிலிருந்த அவர் எகிப்தில் நல்லாட்சியை நிறுவினார்.

மக்கள் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட அப்துல் அஜீஸ் திறமையாளராகவும் அதே வேளையில் நேர்மையாளராகவும் திகழ்ந்தார். அது மட்டுமன்றி மன்னிக்கும் மாண்பாளராகவும், இரக்க சிந்தையுடையவராகவும் விளங்கினார்.

ஒரு முறை கலகம் செய்த அம்ரு இப்னு ஜைது கொல்லப்பட்ட பின்னர், அவரின் குடும்பத்தினரையும் கொன்றொழிக்க தம் அண்ணனும் கலீஃபாவும் ஆன அப்துல் மலிக் இப்னு மர்வான், முயன்ற பொழுது அதனைத் தடுத்து நிறுத்தினார் அப்துல் அஜீஸ்.

அவரின் தந்தை மர்வானோ, தம்முடைய மூத்த மகனுக்குப் பின்னர் இளைய மகனே கலீஃபாவாக பதவி வகிக்க வேண்டும் என்று தீர்மானித்திருந்தார்.

எனினும் பேராசை கொண்ட அப்துல் மலிக் இப்னு மர்வானோ, தம்பிக்கு கிலாஃபத்தை விட்டுக் கொடுக்க மறுத்தார். தம் பிள்ளைகளான, வலீத், சுலைமான் ஆகிய இருவருக்கே கிலாஃபத்தை உரியதாக்க முயன்றார். இதனால் சகோதரர்களிடையே மனக்கசப்பு ஏற்பட்டது.

அப்துல் அஜீஸ் இப்னு மர்வான் எகிப்தின் ஆளுநராக இருந்த பொழுதே, தம்முடைய மகன்—உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களை கல்வி பயில வேண்டி மதீனாவுக்கு அனுப்பி வைத்தார்.

மதீனாவில், ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகன் ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் சிறந்த கல்விமானாகவும், பேரறிஞராகவும் திகழ்ந்தார்கள். அவர்களுக்கு திருக்குர்ஆனிலும் ஹதீஸிலும் ஆழ்ந்த புலமை இருந்தது. எப்படிப்பட்ட பிரச்சினைக்கும் மக்கள் இவர்களையே அணுகி மார்க்கத்தீர்ப்பு பெற்றுச் சென்றார்கள்.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் மதீனாவிற்குச் சென்று தம்முடைய—தாய் வழிப் பாட்டனார் ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களிடம் கல்வி பயின்றார்கள்.

நாளாக, ஆக அவர்கள் கல்வி கேள்விகளில் மிகச் சிறந்து விளங்கினார்கள். பெரியவர்களும், பேராசிரியர்களும் போற்றும் வண்ணம் அவர்கள் கல்வியில் முதன்மை பெற்றுத் திகழ்ந்தார்கள்.



மைமூன் இப்னு மிஹ்ரான் என்ற அறிஞர் இவரைப் பற்றிக் கூறும் பொழுது,

"உமர் இப்னு அப்துல் அஜீஸின் முன்னால், எல்லா அறிஞர்களுமே மாணவர்களாய்க் காட்சியளித்தனர்." என்று குறிப்பிட்டுள்ளது சிந்திக்கத்தக்கது.

"உமருக்குக் கல்வி கற்பிக்கப் போய் நாங்களே, அவரிடமிருந்து கல்வி கற்றோம்" என்று வேறொரு அறிஞர் கூறியுள்ளார்:

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் சிறுவயதில் கல்வியில் சிறந்து விளங்கியதோடன்றி, அமைதியும் அடக்கமும், இறையச்சமும், நீதியும், நேர்மையும் வாய்க்கப்பெற்றிருந்தார்கள்.

## திருமணம்

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ் அவர்கள் இளைஞராயிருந்தபொழுது அவர்களின் தந்தைக்கும் பெரிய தந்தை அப்துல் மலிக் இப்னு மர்வானுக்கும் கிலாஃபத் விஷயத்தில் மனக்கசப்பு ஏற்பட்டது.

பாட்டனார் மர்வானோ, தம்முடைய மூத்த மகன் அப்துல் மலிக் இப்னு மர்வானுக்குப் பின்னர் இளைய மகன் அப்துல் அஜீஸ் இப்னு மர்வானே கிலாஃபத்திற்கு உரியவர் என நியமனம் செய்து விட்டு இறந்தார்.

ஆனால், இன்றோ, அண்ணன் தம்முடைய தம்பியை ஏமாற்ற முனைந்து கொண்டிருந்தார். தம்முடைய மக்கள் வலீதும், சுலைமானுமே கிலாஃபத்தை அடைய வேண்டும் என்று பேராசைப்பட்டார். தமக்குப்பின் தம் மகன் வலீதும் அவரை அடுத்து சுலைமானுமே பதவியில் அமர வேண்டுமெனக் கூறினார்.

இதே கவலையில் இருந்த அப்துல் அஜீஸ் கி. பி. 704 இல் இறப்பெய்தினார். தம் தந்தை தம்முடைய பெரிய தந்தையால் ஏமாற்றப்பட்டதையறிந்த உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் வேறு வழியின்றி பொறுமையை மேற்கொண்டார்கள்.

தம்முடைய தந்தையின் வாக்குச்கு மாறுசெய்ததை எண்ணி அப்துல் மலிக் இட்னு மர்வான் இப்பொழுது வருத்தப்பட்டார். காலம் கடந்த பின் ஞானேதயம் பிறப்பதால் என்ன பயன்?

தம் தம்பியை ஏமாற்றிவிட்ட எண்ணம் அவரை வாட்டியிருக்கக் கூடும் என்று எண்ணத்தோன்றுகிறது. அதனுலேயே தம்பியின் மரணத்திற்குப் பின்னர் தம்பி மகனுகிய உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களை டமாஸ்கஸ் (திமிஷ்க்) நகரத்திற்கு வரவழைத்தார் கலீஃபா அப்துல் மலிக் இப்னு மர்வான்.

பின்னர் தம்முடைய மகள் ஃபாத்திமாவையும் அவர்களுக்கு மண முடித்து வைத்து கி. பி. 706 இல் மதீன நகரின் ஆளுநராக பதவியிலமத்திஞர். இவ்வாறு தம்பி மகனுக்கு நன்மை செய்து தம் தம்பிக்கு இழைத்த துரோகத்திற்கு ஆறுதல் தேடிக் கொண்டார்.

## மதீனவின் ஆளுநர் பதவி

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் ஆளுநராக பதவியேற்ற பொழுது கலீஃபாவுக்கு அவர்கள் விதித்த முதல் நிபந்தனை என்ன தெரியுமா?

"இதற்கு முன் இந்நகரின் ஆளுநராக இருந்தவர்கள் கொடுங்கோலர்களாக இருந்தனர். கொடுஞ்செயல் புரியுமாறு அவர்கள் அரசு மேலிடத்தால் வற்புறுத்தப் பட்டனர். அவ்வித வற்புறுத்தல் என்னிடம் கூடாது; அஃது மட்டுமன்று, எவரையும் துன்புறுத்துமாறு எனக்கு ஆணையிடவும் கூடாது."

என்று அவர்கள் கூறிஞர்கள்.

அது கேட்ட கலீஃபா அப்துல் மலிக் இப்னுமர்வான், அவர்களை வியப்புக்கண்களுடன் நோக்கிஞர். கொடுங் கோலர்களுக் கெல்லாம் கொடுங்கோலனுன ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் தம்முடைய ஆளுநராக இருக்கும் பொழுது, ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் இவ்வாறு நிபந்தனை விதிப்பது வியப்பாக ஏன் இருக்காது.



"ஆகட்டும். நீர் நீதி நேர்மையுடனே, கொடுங் கோன்மையின்றி விரும்பிய வண்ணம் ஆட்சி புரிவீராக! தங்களிடமிருந்து அரசு கருவூலத்திற்கு ஒரு திர்ஹம் வராவிடினும் பரவாயில்லை" என்று கூறிஞர் அப்துல் மலிக் இப்னு மர்வான்.

இதன் பின்னர் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் மதீன நகர் வந்து சேர்ந்தனர். அங்கு அவர்கள் ஆளுநராகப் பதவியேற்றவுடன், அந் நகரில் இருந்த மார்க்க அறிஞர்களனைவரையும் ஒன்று கூட்டி அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு, அதற் கேற்ப ஆட்சி செய்தார்கள்.

கி.பி. 705 இல் கலீஃபா அப்துல் மலிக் இப்னு மர்வான் இறப்பெய்திஞர். அவரை யடுத்து அவரின் மகன் முதலாம் வலீத் இப்னு அப்துல் மலிக் கலீஃபா வாக பதவியேற்றூர். அவர் கி.பி. 715 வரை ஆட்சி செய்தார்.

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்குப் பின்னர் முதலாம் வலீதின் ஆட்சியில் தான் இஸ்லா மியப் பேரரசு மிகவும் விரிவடைந்தது. நாட்டில் அமைதி நிலவியது. எனினும் பஸ்ராவின் ஆளுநர் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃபின் கொடுமையால் மக்கள் அவதியுற்ற னர். அவர்கள் பட்ட இன்னல்கள் இஸ்லாமிய வர லாற்றில் இரத்தத்தால் எழுதப்பட வேண்டிய துயரக் குறிப்புகள் எனில் அது மிகையாகாது.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர் கள், மதீனவின் ஆளுநராக இருந்த பொழுது, கலீஃபா வலீது மதீனவில் உள்ள மஸ்ஜிதுந் நபவிப் பள்ளிவாயிலை விரிவு படுத்திக் கட்டுவதற்கு ஆணையிட்டார். அவ் வாணையை ஏற்ற அவர்கள் பெருமகிழ்வுடன் அத்திருப் பணியில் ஈடுபட்டனர்.

அன்னை ஆயிஷா (ரலி) பீபீஃபாத்திமா (ரலி) ஆகி யோரின் இல்லங்களைத் தவிர்த்து நபி (ஸல்) அவர் களின் ஏனைய பரிசுத்த மனைவிமார்களின் இல்லங்களை 7000 பொற்காசுகள் (தீனர்களை) இழப்புத் தொகை

யாகக் கொடுத்து அவர்கள் விலைக்கு வாங்கினர். பின்னர் அவ்வில்லங்களை இடித்துவிட்டு மஸ்ஜிதுந் நபவியை விரிவு படுத்தினர்.

அதன் கட்டுமானப் பணிக்கென கிரேக்கப் பேரரசர் 80 கட்டிடக்கலை நிபுணர்களை அனுப்பி வைத்தார். அவர்களைக் கொண்டு அழகிய சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்பட்டன.

அப்பொழுதுதான் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அடக்கப்பெற்றிருக்கும் ஹுஜ்ரா முபாரக்கா (பாக்கியம் பெற்ற அறை)வும் பள்ளிவாசலுடன் இணைக்கப் பட்டன. இவ்வாறு மஸ்ஜிதுந் நபவி பள்ளிவாயில் புதுப்பிக்கப்பட்டது.

அதனையடுத்து ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் பல்வேறு ஊர்களிலிருந்தும் நகரங்களி லிருந்தும் மதீனாவிற்கு வரும் சாலைகளைச் சீரமைத்தார் கள். சாலை நெடுகிலும் ஆங்காங்கே பயணியர் விடுதி கள் கட்டப்பட்டன. ஏராளமான நீர்த்தேக்கங்கள் வெட்டப்பட்டன.

மதீனாவில் அமைதி நிலவியது. அது பஸ்ராவில் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃபால் உருவாக்கப்பட்ட மயான அமைதி போன்றதல்ல. உண்மையான ஊழியத் தால் மக்கள் உள்ளங்களிலிருந்து பீறிட்டு வந்த மகிழ்ச்சி யின் அமைதி. இதனால் பஸ்ராவில் துன்புறும் முஸ்லிம் கள் அமைதியான வாழ்க்கையைத் தேடி மதீனாவிற்கு வந்து குடியேறலாயினர்.

அதுகண்டு, பொறாமையுற்ற ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் தம்முடைய மாநிலத்திலிருந்து அரசுக்கெதிராக குழப்பம் விளைவிக்கும் குற்றவாளிகள் மதீனாவிற்குச் சென்று குடியேறுவதாகவும் அவர்களுக்கு உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் புகலிடம் தருவதாகவும கலீஃபா வலீதிடம் முறையிட்டார். முன்பின் சிந்தித்துப் பாராத கலீஃபா வலீத், உடனே உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களை மதீனாவின் ஆளுநர் பதவியிலி ருந்து நீக்கம் செய்தார்.



# கலீஃபா சுலைமானின் வாரிசு

கலீஃபா அப்துல் மலிக் இப்னு மர்வான் ஆட்சியி லும் அவரின் மரணத்திற்குப் பின்னர், வலீத் இப்னு அப்துல் மலிக் ஆட்சியிலும் ஆளுநராயிருந்த ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃபின் கொலைவெறிக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆம் அக்கொடியவன் புற்றுநோயால் அவதியுற்று பெருத்த மரண வேதனையுடன் ஹிஜ்ரி 95 (கி. பி. 714) ரமலான் 25ம் நாள் வெள்ளியன்று தம் முடைய 54வது வயதில் இறந்தான்.

அடுத்து, கலீஃபா வலீத் இப்னு அப்துல் மலிக் கி. பி. 715 (ஹிஜ்ரி 96) இல் இறப்பெய்தினர் எனவே அவரின் சகோதரர் சுலைமான் இப்னு அப்துல் மலிக் அதே ஆண்டில் ஜமாதுல் ஆகிர் மாதத்தில் கலீஃபாவாப் பதவியேற்றார்.

அவர் தம்முடைய சிறிய தந்தையின் மகனாகிய உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களை மிகவும் நேசித்தார். அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் பல்வேறு நற்செயல்களை அவர் செய்தார்.

அவற்றுள் ஒன்று, ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃபால் சிறை செய்யபபட்டிருந்த 50,000 ஆண்களையும் 30,000 பெண்களையும் அவர் விடுதலை செய்தது.

பின்னர் அவர்களின் வேண்டுகோளின் பேரில் கொடிய சட்டங்கள் நீக்கப்பட்டன. கொடுமை இழைக் கும் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

சுலைமான் இப்னு அப்துல் மலிக்கின் ஆட்சி இரண்டு ஆண்டுகள் நீடித்தது. அதிகமான உணவு அருந்தியதன் காரணமாக அவரின் உடல் நிலை கெட்டது என்று கூறப் படுகிறது.

அவர் இறப்புப் படுக்கையில் கிடந்தார். அப் பொழுது தமக்குப் பின்னர் எவரைத் தம் வாரிசாக நியமிப்பது என்பது பற்றி அவருக்கு குழப்பமும், தயக்க

மும் ஏற்பட்டது. அவரின் மக்களோ சிறுவர்களா யிருந்தனர். எனினும் அவர்களுக்கு பெரிய அரச ஆடைகள் அணிவிக்கப்பட்டு, அவர் முன்னால் அழைத்து வரப்பட்டனர். எனினும் அவர்களுள் ஒருவர்கூட கிலாஃபத்திற்கு தகுதியானவராக இல்லாதிருப்பது கண்டு மனம் வருந்திய அவர்,

"வயது வந்த ஆண் மக்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டினும் நற்பேறுடையவர்கள் யார்?" என்று கூறினார்.

அப்பொழுது அவரின் அருகிலிருந்த ரஜா இப்னு ஹைறவான், ஈஸா இப்னு ஹயாத் ஆகியோர், "ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களே தற்பொழுது கிலாஃபத்திற்குத் தகுதியுடையவர்" என்று ஆலோசனையும் பரிந்துரையும் செய்தார்கள்.

அதுகேட்ட கலீஃபா சுலைமான் இப்னு அப்துல் மலிக் மறுபேச்சின்றி அவ்வாலோசனையை உடனடியாக ஏற்றுக் கொண்டார். பின்னர் ஒரு நாளில், தமக்குப் பின்னர் கிலாஃபத்திற்கு உரியவரும் தகுதியானவரும் உமர் இப்னு அப்துல் அஜீஸே என்று எழுதி. அதில் அரசு முத்திரையை இட்டு, தன் குடும்பத்தினரையும், உற வினரையும் அழைத்து உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களுக்காக பைஅத் (விசுவாசப் பிரமாணம்) வாங்கிக் கொண்டார்.

இது அறிந்த ஹஜ்ரத் உமர் உப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், மிகவும் வருந்தினார்கள். தாம் கலீஃபாவாக பதவி வகிக்க நேருமோ என்றஞ்சி நடுங்கினார்கள்.

முதலமைச்சரிடம் ஓடிச்சென்ற அவர்கள், அவரை நோக்கி, "கலீஃபா சுலைமான் தம்முடைய வாரிசாக என்னை நியமித்துள்ளார் என்று கேள்வியுற்றேன். அது உண்மையாயின், அப்பதவியை இப்பொழுதே நான் துறந்து விடுகிறேன். கலீஃபா தம்முடைய ஆயுட்காலத்திலேயே வேறொருவரை தம்முடைய வாரிசாக நியமித்து விட்டுச் செல்லட்டும்" என்று பரபரப்புடன் கூறினார்கள்.



எனினும் கலீபா சுலைமானே அதற்குள் இறந்து விட்டார். ஹிஜ்ரி 98 (கி. பி. 717) ஸஃபர் 21ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று அவரது இறப்பு நிகழ்ந்தது அப்பொழுது அவருக்கு வயது 45. இறப்பெய்திய இடம் தாபித் என்னும் ஊராகும்.

## கலீஃபாவாக பதவியேற்றல்

கலீஃபா சுலைமான் அவரின் வாரிசாகவும், அரபு நாட்டின் கலீஃபாகவும் தங்களை நியமித்து விட்டுச் சென்றதை ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் உள்ளம் ஏற்றுக்கொள்ளவே இல்லை.

அவர்கள் மக்களை நோக்கி கூக்குரலிட்டு "ஓ! என்னருமை மக்களே! நன்றாக சிந்தித்துப் பாருங்கள். காலஞ் சென்ற கலீஃபா சுலைமான், என்னிடம் சிறிதும் கலந்தாலோசியாமல் என்னை அவரின் வாரிசாக நியமனம் செய்து விட்டுச் சென்றுள்ளார். எனவே கிலாஃபத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. நீங்கள், உங்களுக்கு விருப்பமான வேறொருவரை கலீஃபாவாகத் தேர்நதெடுத்துக் கொள்ளுங்கள்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

அது கேட்ட மக்கள், "வேண்டாம்! வேண்டாம்! வேறொரு கலீஃபா எங்களுக்கு வேண்டாம்! தாங்களே எங்களின் கலீஃபா" என்று ஒருமித்த குரலெழுப்பிக் கூறினார்கள். அதுகேட்ட ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் ஏது செய்வது, யாது சொல்வது என அறியாமல் விழித்தார்கள். இறுதியில், அவர்கள் கிலாஃபத்தை ஏற்று, கலீஃபா ஆனார்கள்.

அப்பொழுது அவர்கள் மக்களை நோக்கிக் கூறியது என்ன தெரியுமா?

'என் அன்பிற்குரிய மக்களே! நான் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிந்து ஒழுகும் வரை நீங்களனை வரும் என்னைப் பின்பற்றுங்கள்" என்பது தான்.

அவர்கள் கலீஃபா ஆனதும் மார்க்க அறிஞர்கள் அனைவரும் ஒன்று கூடி அவர்களுக்காக துஆ இறைஞ்சினர்கள். அப்பொழுது அவர்கள், அறிஞர்களை நோக்கி, ''தாங்கள் எனக்காக மட்டும் துஆ இறைஞ்சவேண்டாம் எல்லா மக்களுக்காகவும் இறைஞ்சுங்கள். அவர்களுள் நானும் அடங்கியிருக்கிறேன்'' என்று கூறினர்கள்.

## மார்க்க அறிஞர்களின் ஆலோசனை

உமைய்யா கலீஃபாக்கள் டமாஸ்கஸ் (திமிஷ்க்) நகரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தார்கள். எனவே கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களும் அந்நகரையே தங்கள் ஆளுகைக்கு தொடர்ந்து தலை நகராகக் கொண்டார்கள்.

பதவியேற்றவுடன் அவர்கள் மெய்ஞ்ஞானி ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களுக்கு ஓர் கடிதம் எழுதினர்கள்.

அதில் ''மாபெரும் பொறுப்பு என்மீது சுமத்தப் பட்டுள்ளது. அல்லாஹ்வின் நல்லடியார்களுக்கு உளத் தூய்மையுடன் நான் பணியாற்ற வேண்டுமென எனக்காக இறைஞ்சுமாறு தங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் அன்பு கூர்ந்து என் செயல்களனைத்தையும், ஒன்றுவிடாமல் அணுவணுவாகக் கண் காணிக்கக் கூடிய அறிஞர் ஒருவரை என்னிடம் அனுப்பிவைக்க வேண்டும். அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தையும், அன்பையும் பெறவேண்டியே நான் எனக்காக ஒரு கண் காணிப்பாளரை வைத்துக் கொள்ள முடிவு செய்தேன்'' என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

அக்கடிதத்தைப் படித்த ஹஜ்ரத் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களுக்குப் பின்வருமாறு பதில் எழுதினர்கள்.

''தங்கள் செயல்களனைத்தையும் ஒன்றுவிடாது கண்காணிக்கும் ஒரு நல்லார் தங்களுடன் வந்து தங்கியிருப்பது எவ்வாறு இயலும்? அது நடவாத ஒன்று! ஏனெனில், தாங்களே பேரரசராய் உள்ளீர்கள்.



தங்களிடம் பணியாற்றும் ஒருவர் தங்களின் குறையைக் காணநேரினும், அதனை தங்களிடம் எடுத்துரைக்க மாட்டார். எடுத்துரைக்க அஞ்சுவார். அதனால் தங்களுக்குப் பயனேதும் ஏற்படாது. எனவே தாங்கள் அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். அவன் பிறரின் தேவையை விட்டும் தங்களைக் காத்து பேரருள் பாலிப்பான். மேலும் எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சுகின்றாரோ அவருக்கு இவ்வுலகமே அஞ்சும். எவர் அல்லாஹ்வின் முன்னிலையில் தம் பாவங்களை எண்ணி நாணமுற வில்லையோ, அவர்மீது இவ்வுலகம் சிங்கத்தைப் போன்று பாய்கின்றது. தாங்களோ மாபெரும் பொறுப்பினைத் தாங்கியவராக உள்ளீர்கள். மக்களுக்கோ தங்களின் உதவி இப்பொழுது அவசியமாகும். திக்கற்றவர்களைத் தங்களைப் போன்று கருதுங்கள்; தங்களுக்கென எதனை விரும்புகின்றீரோ அதனையே மற்றவர்களுக்கும் விரும்புங்கள்; செய்யுங்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

## ஹஜ்ரத் ஹஸன் பஸ்ரீ (ரஹ்)யின் உபதேசம்

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், மற்றொரு முறை ஹஜ்ரத் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்களுக்கு மடல் வரைந்து, அதில் தமக்கு அறிவுரை பகர்ந்து பதில் எழுதுமாறு வேண்டிக் கொண்டார்கள்.

அவர்களும், கலீஃபாவின் வேண்டுகோளுக்கிணங்கி பதில் எழுதி, அதில் அறிவுரைகளும் கூறியிருந்தார்கள்.

அவர்கள் தம் பதில் கடிதத்தில் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களுக்கு எழுதியதாவது :

''நான் தங்களுக்குச் சொல்ல வேண்டிய, அறிவுரையைக் காட்டிலும் பயங்கரமான பிரச்சினைகள் தங்கள் முன் நிற்கின்றன. அவற்றைத் தாங்கள் கவனிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

(1) உலகில் எவர் தம்மைத் தாமே விசாரணை செய்து கொள்வாரோ அவர் வெற்றியடைவார்.

(2) தம்மைக் கண்காணிப்பதில் பொடுபோக்காகவும் அலட்சியமாகவும் உள்ளவர் தோல்வியடைவார்.

(3) தம்முடைய இறுதி முடிவைப் பற்றிச் சிந்திப்பவர் வெற்றியடைவார்.

(4) மனோ இச்சைக்கு வழிபட்டவர் வழிதவறிப் போவார்.

(5) பொறுமையை மேற்கொள்பவர் பெரும் செல்வத்தைப் பெற்றுக் கொள்வார்.

(6) இறையச்சம் உடையவரும், பேணுதல் மிக்கவரும் நரக நெருப்பிலிருந்து பாதுகாக்கப் படுவார்.

(.) இறைவனால் பாதுகாக்கப் பெற்றவர், படிப்பினை பெறுவார்.

(8) படிப்பினையைப் பெற்றுக் கொண்டவர் அகப்பார்வையைப் பெற்றுக் கொள்வார்.

(9) எவருக்கு அகப்பார்வை கிட்டுமோ அவருக்கு விளக்கம் கிடைக்கும்.

(19) விளக்கம் பெற்றவர் அறிவைப் பெறுவார்.
(—நூல்: இஹ்யா, 4-56)

இறைநம்பிக்கை யாளர்களின் தலைவ, தாங்கள் ஒரு முறை தவறிழைத்து விடின் மீண்டும் அத்தவற்றினைச் செய்யாது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். மேலும் செய்த தவற்றினை எண்ணி வருந்துவதோடு, தங்கள் வாழ்நாளில் எப்பொழுதும் அத்தவறினை இழைக்காமல் தவிர்ந்து கொள்ளுங்கள். தங்களுக்குத் தெரியாததைப் பிறரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். சினமேற்படின் அடக்கிக் கொள்ளுங்கள்.''

## அரசியல் சீர் திருத்தங்கள்

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபா ஆனவுடன், கிலாஃபத்தில் இதற்கு



முன் நடந்து வந்த தவறுகள் எதுவும் தொடர்ந்து நடைபெறாதிருக்க நடவடிக்கைகள் மேற்கொண்டனர். மேலும் அமைச்சர்களிடமும், அதிகாரிகளிடமும், ஆளுநர்களிடமும் காணப்பட்ட குறைகளை நீக்க அவர்கள் படாதபாடு பட்டனர்.

(1) அவர்கள் கலீஃபாவாக பதவியேற்பதற்கு முன் உமைய்யா கிலாஃபத்தின் அதிகாரிகளும், மற்றவர்களும் தொழுகை விஷயத்தில் பொடுபோக்காக இருந்து வந்தனர். அதனை வன்மையாகக் கண்டித்த ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) தொழுகையை மேற்கொள்ளாத அதிகாரிகள், ஆளுநர்கள், ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

(2) ஜகாத் வசூலிப்பதில் நடந்து வந்த முறைகேடுகளையும், அதனை விநியோகிப்பதில் நடந்த ஒழுங்கீனங்களையும் வன்மையாகக் கண்டித்த அவர்கள், கிலாஃபத்தின் ஆணையை அலட்சியப் படுத்தியவர்களை கடுமையாக தண்டித்தனர்.

(3) அரசவையில் பாடல், இசை ஆகியவற்றை அவர்கள் தடைசெய்தார்கள். கவிபுனைந்து, கலீஃபாவைப்புகழும் வழக்கத்தைத் தடைசெய்த அவர்கள் கவிஞர்களுக்கு பைத்துல் மால் என்னும் மக்களுக்குரிய பொது நிதியிலிருந்து பணத்தை எடுத்துத்தரும் பழக்கத்தையும் தடைசெய்தார்கள். மேலும் உமைய்யா குடும்பத்தினருக்கெனத் தனியாகக் கொடுக்கப்பட்டு வந்த மான்யங்களையும் நிறுத்தினார்கள்.

(4) ஹஜ்ரத் முஆவியா (ரலி) அவர்களின் காலத்திலிருந்து ஜும்ஆ குத்பாவின் பொழுது ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களைச் சபிக்கும் தீய பழக்கம் இருந்து வந்தது அது முறையல்ல என்று அதற்கு முன் ஆண்ட கலீஃபா சுலைமானோ கலீஃபா வலீதோ, கலீஃபா அப்துல் மலிக் இப்னு மர்வானோ, அல்லது கலீஃபா முதலாம் மர்வானோ

எவருமே கருதவில்லை. எனவே இஸ்லாத்தில் விரும்பத்தகாத அச்செயல் வாரந்தோறும் வெள்ளிக்கிழமையன்று தொடர்ந்து நடந்து வந்தது.

பேரறிஞரும், ஹதீஸ் கலைவல்லுனரும் மார்க்கச் சட்ட மேதையுமான கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபா ஆனவுடன் அத்தீச் செயலை நிறுத்தினர்.

அதற்குப் பகரமாக, ''உண்மையில் அல்லாஹ் நீதியையும், கருணையையும் உறவினர்களுடன் நல்ல விதமாக நடப்பதையுமே பணிக்கின்றான். இன்னும் நாணமின்மை, தீமை, சதி ஆகியவற்றை விலக்குகின்றான். அவன் உங்களுக்கு போதிககிறான். நீங்கள் இவற்றை நினைவில் வைத்துக் கொள்ளக் கூடுமன்றோ?'' என்னும் திருக்குர்ஆன் வசனத்தை ஓதுமாறு பணித்தார்கள்.

பெண்களின் ஆடை, அலங்காரம் வரம்பு மீறி இருப்பதை அவர்கள் கண்டித்தார்கள். ஆண்கள் நடமாடும் பகுதிகளில், பெண்கள் அதிகம் நடமாடாமல் இருக்க நடவடிக்கையை மேற்கொண்டார்கள் 'துர்ரா சுகைனா' என்பது ஒருவகை பின்னல் சடையாகும். அது பெண்ணை மிக்க வசீகரப்படுத்திக் காட்டும் பின்னல் ஆகும். அத்தகைய பின்னல் பெண்கள் தலையில் பின்னிக் கொள்ளக் கூடாதென அவர்கள் தடை செய்தார்கள்.

மக்களிடையே குறிப்பாக இளைஞரிடையே ஒழுக்கக் கேடுகள் உருவாவதை எண்ணி அவர்கள் மனம் வருந்தினார்கள்.

ஒருமுறை அவர்கள் ஓர் குளியலறைக்குச் சென்றார்கள். அங்கு ஓர் உருவப்படம் வரையப்பட்டிருந்ததைக் கண்டு அளவிலாச் சினம் கொண்டார்கள். அது ஓர் ஆபாச ஓவியமாக இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. அது கண்டு சினமுற்ற அவர்கள்,

அதனை வரைந்தவர் எவர் என எனக்குத் தெரியவரின் அவரைக் கடுமையாக தண்டித்திருப்பேன் என்று கூறி



னார்கள். இவ்வாறு கூறிய அவர்கள் பெண்கள் குளியலறைக்குச் சென்று குளிப்பதைத் தடைசெய்தார்கள்.

மதுவின் விஷயத்தில் அவர்கள் தீவிரக் கொள்கையைக் கடைபிடித்தார்கள். நாட்டில் மது அருந்துவது தடை செய்யப்பட்டது மட்டுமன்றி, மதுக்கடைகள், மதுத்தொழிற்சாலைகள் ஆகியவற்றை மூடும்படியும் ஆணையிட்டார்கள். அவ்வாணையை மீறுவோர் கடுமையாக தண்டிக்கப்பட்டனர்.

ஒருமுறை ஒரு கூட்டத்தினர் மது அருந்திக் கொண்டிருப்பதாக அவர்களுக்குச் செய்தி வந்தது. அத்துணைப் பேர்களுக்கும் சவுக்கடி கொடுக்குமாறு அவர்கள் ஆணையிட்டார்கள்.

அப்பொழுது அக்கூட்டத்தில் நோன்பாளியொருவர் இருப்பதாகவும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அதுகேட்ட அவர்கள், ''முதல் அடியை அவருக்குக் கொடுங்கள்'' என்று கூறினார்கள். அவ்விதமே செய்யப்பட்டது.

''இரும்படிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை'' குடிகாரர்களிடம் நோன்பாளிக்கு என்ன வேலை? இவ்வாறு சீர்திருத்தம் செய்வதில் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் முனைந்து நின்றார்கள்.

## எளிமையின் துவக்கம்

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் அரச குடும்பத்தில் பிறந்து ஆடம்பர ஏகபோகத்தில் வளர்ந்தார்கள். திருமணம் ஆகி, மதீனாவின் ஆளுநராக நியமிக்கப்பட்ட பின்னரும் ஆடம்பர வாழ்வு அவர்களைத் தொடர்ந்தது. எனினும் அலரீகள் கலீஃபாவாக நியமிக்கப்பட்டதும் தங்களின் வாழ்க்கை முறையினை முற்றிலும் மாற்றியமைத்துக் கொண்டார்கள்.

நேர்வழிபெற்ற கலீஃபாக்களின் வாழ்க்கைமுறை எவ்வாறிருந்ததோ அவ்வாறே அவர்கள் தங்கள் வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டார்கள். எனினும் அவர்களின் வாழ்க்கை முழுக்க முழுக்க அவர்

களின் பாட்டனார் ஹஜ்ரத் உமர் இப்னுல் கத்தாப் (ரலி) அவர்களின் வழிமுறைகளையே ஒத்திருந்தது.

எளிமை, துறவு, பணிவு, பேணுதல், இறையச்சம், உணக்கம் இவைகளனைத்தும் அவர்களின் அணிகலன்களாக விளங்கின. அது அவர்கள் மீது அல்லாஹ்பொழிந்தபேரருள் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் ஓர்அரசகுலத்தில் உதித்து ஆடம்பரத்தில் திளைத்து திடீரென உலகை வெறுப்பதும் எளிமையை ஏற்பதும் சாதாரணமா, என்ன!

துவக்கத்தில் ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களிடமும், பின்னர் பேரறிஞரும் பக்திமானுமாகிய சாலிஹ் இப்னு கைஸான் (ரஹ்) அவர்களிடமும் கல்வி பயின்ற அவர்கள், தாங்களும் குர்ஆன், ஹதீஸ், மொழிப்புலமை ஆகியவற்றில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள்.

அவர்களின் ஆசான் சாலிஹ் இப்னு கைஸான் (ரஹ்) அவர்கள் மாணவர்களிடம் கண்டிப்பானவர்களாய் இருந்தார்கள்.

அவர்களின் கண்டிப்பு எத்தகையதாய் இருந்தது என்பதற்கோர் உதாரணம் காட்டலாம். ஒரு முறை உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தொழுகைக்குத் தாமதமாக வந்து கலந்து கொண்டார்கள்.

தொழுகை முடிந்தபின் ஆசான் மாணவரைப் பார்த்து, ''தொழுகைக்குத் தாமதமாக வந்தது ஏன்?'' என்று வினவ,

''தலைசீவிக்கொண்டிருந்ததால் தாமதமாகி விட்டது'' என்று உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் விடையளித்தார்.

அதுகேட்ட உஸ்தாத் சாலிஹ் இப்னு கைஸான் (ரஹ்) அவர்கள், மாணவர் மீது சினமுற்று ''தொழுகையைக் காட்டிலும், தலையலங்காரம் பெரிதாய் போய் விட்டதா உமக்கு? இறைவனை வணங்குவதற்கு தலைமுடி



தடையாய் இருப்பின் அது தலையில் இருப்பதைக் காட்டிலும், இல்லாதொழிவதே மேல்'' என்று கூறி தலையை மொட்டையடித்து விடுமாறு ஏவினார்கள். ஆசானின் வார்த்தைக்கு மதிப்பளித்த ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் உடனே தம் தலையை மொட்டையடித்து விட்டார்கள்.

பெரியார்களின் வார்த்தைக்குக் கட்டுப்படும் உயரிய பண்பும், மார்க்க நெறிமுறைக்கு வழிபட்டு நடக்கும் மேதா விலாசமும் அவர்களிடம் இயல்பிலேயே குடி குடிகொண்டிருந்தன.

அவர்களுக்கு இளவயதிலேயே திருமணம் செய்து வைக்கப்பட்டது. உடனே மதீனா நகரின் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார்கள். அப்பொழுது அவர்களின் உடைகளும், உடமைகளும் முப்பது ஒட்டகங்கள் மீது ஏற்றிச் செல்லப்பட்டன. அதனைக் கண்ணுற்ற அவர்களின் சக மாணவர்களும், தோழர்களும்,

''ஹூம்! அறிவு ஆட்சிக்கு பலியாகி விட்டதே!'' என்று கூறி வேதனைப்பட்டார்கள்.

ஆளுநராயிருந்த பொழுது, உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் ஆடம்பர வாழ்வு எத்தகையதாய் இருந்தது தெரியுமா?

நானூறு பொற்காசுகள் (தீனார்கள்) விலை—மதிப்புள்ள ஆடை அவர்களிடம் கொண்டுவரப் பட்டால் அதனையும் தாழ்வாகவே கருது வார்களாம். அவர்கள் பூசிக்கொள்ளும் வாசனை திரவியமோ விலைமதிப் பற்றதாய் இருந்ததாம்.

ஆனால் கலீஃபாவாக ஆனபின்னர் இறையருளால் அவர்களின் நிலை முற்றிலும் மாற்றமடைந்தது.

கலீஃபா சுலைமானை அடக்கம் செய்துவிட்டு திரும்பிய கலீஃபா உமர் இப்னு அஜீஸ்—தம்மை ஓர் கலீஃபாவாகக் கருதிக்கொள்ளாமல், தம்முடைய பாட்டனார் உமர் கத்தாப் (ரலி) அவர்களின் வாரிசு என்றே கருதிக் கொண்டு செயலாற்றத் துவங்கினார்கள்.

அவர்களை கலீஃபாவின் மாளிகைக்குச் சென்று வசிக்குமாறு கூறப்பட்டபொழுது அதனை ஏற்றுக் கொள்ளாது, அவர்கள் தம்முடைய சிறு கூடாரத்திற்கே சென்றார்கள். அவர்களுக்காக அரசாங்க கூடாரங்களும் அரசாங்க விரிப்புகளும் போடப்பட்டன. அவை அனைத்தையும் அரசுப் பொது நிதியில் சேர்த்து விட்டு தாமும் ஓர் சாதாரணப் பாயில் அமர்ந்து கொண்டார்கள்.

அதன் பின்னர் கலீஃபாவுக்கு உரிய அலங்கரிக்கப் பட்ட புரவி கொண்டு வரப்பட்டது. அதனைப் பயன் படுத்திக் கொள்ளுமாறு அவர்களுக்குக் கூறப்பட்ட பொழுது அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளாது தம் முடைய கோவேறு கழுதைமீதே அவர்கள் அமர்ந்து சென்றார்கள்.

மதீனாவின் ஆளுநராக இருந்தபொழுது, நானூறு பொற்காசுகளுக்கும் அதிகமான விலைமதிப்புள்ள ஆடை அணிந்த அவர்களின் ஆடை, கலீஃபா ஆனபின்னர் கந்தலாக இருந்தது. ஒட்டுபோடப்பட்டை ஆடையை அவர்கள் உடுத்தினார்கள்.

அதனைக்கண்ட ஒருவர் அவர்களை நோக்கி, ''அல்லாஹ் தங்களுக்கு எல்லாவித நற்பேறுகளைத் தந்திருந்தும் கூட, ஒட்டு ஆடையை அணிவதேன்? நல்ல ஆடை அணியக்கூடாதா?'' என்று வினவ,

''செல்வத்தில் திளைக்கும் பொழுது நிதானம் வேண்டும். அதிகாரத்தில் இருக்கும் பொழுது மன்னிக்கும் இயல்பு வேண்டும். அதுவே ஏற்றமுடையதாகும்'' என்று அவர்கள் விடையளித்தனர்.

அவர்களின் ஆடை எந்த அளவிற்கு எளிமையாக இருந்ததெனில் புதிதாக எவரேனும் வரின், கூட்டத்தின் நடுவில் அமர்ந்திருக்கும் அவர்கள் தாம் கலீஃபா என்றறிய முடியா வண்ணம் இருந்தது.

அவர்கள் கலீஃபா ஆனவுடன், மேற்கொண்ட இறையச்ச வாழ்வு, விவரிக்க முடியாததாகும்.



அவர்கள் தம்முடைய உடமைகள் அனைத்தையும் 23,000 தீனாருக்கு விற்று அவற்றை பைத்துல் மால்—பொது நிதியில் சேர்த்தனர். அதுமட்டுமா? கலீஃபா வலீதால் தமக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட மோதிரத்தையும் அவர்கள் பொதுநிதியிலேயே சேர்த்து விட்டனர். அத்துடன் நின்றார்களா? தம் மனைவி ஃபாத்திமாவுக்கு அவரின் தந்தையும் சகோதரரும், பொதுநிதியிலிருந்து அளித்த நகைகளையும். அன்பளிப்புகளையும் மீண்டும் பொதுநிதியிலேயே சேர்த்துவிடுமாறு கூறினார்கள். இன்றேல் அவரை அக்கணமே மணவிடுதலை விடுவதாகக் கூறினர்.

அதுகேட்ட அம்மாதரசி மறுவார்த்தை கூறாது உடனே நகைகளையும் அன்பளிப்புகளையும் பொது நிதியில் சேர்த்து வரலாற்றில் உத்தம பத்தினி என்னும் மாபெரும் பெயர்பெற்றார்.

உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் மரணத்திற்குப் பின்னர் கலீஃபா ஆன ஃபாத்திமாவின் சகோதரர் எஜீத் மீண்டும் அந்நகைகளை பைத்துல் மாலிலிருந்து எடுத்து வந்து தம் சகோதரியிடம் கொடுத்த பொழுது ''என் கணவர் உயிருடனிருந்த பொழுதே அவற்றை நான் விரும்பவில்லையே! இப்பொழுது அவை எனக்கு எதற்கு?'' என்று கூறினாராம்.

இவ்வாறு ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபா ஆன பின்னர் மிக்க எளிமையான வாழ்க்கையை தமக்காகவும், தம் குடும்பத்தினருக்காகவும் அமைத்துக் கொண்டார்கள்.

ஒரேயொரு ஜோடி முரட்டுத்துணி வைத்திருந்த அவர்கள் அதனையே மீண்டும் மீண்டும் துவைத்து அணிந்து கொண்டார்கள். அதனால் சில நாட்களில் ஜும்ஆ தொழுகைக்குக் கூட அவர்கள் தாமதமாக வந்தார்கள்.

## காரிஜிகளின் மகிழ்ச்சியும் உமையாக்களின் எதிர்ப்பும்

ஃபதக் என்னும் சிற்றூர் கைபரின் அருகில் இருந்த சிற்றூராகும். அதில் யூதர்கள் வாழ்ந்து வந்தனர். கைபர் போரின் பொழுது ஹிஜ்ரி 7-இல் அங்கிருந்த யூதர்கள், நபி (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி விளையும் மகசூலில் பாதியை அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்குக் கொடுத்து விடுவது, என்று தீர்மானிக்கப்பட்டது.

எவ்விதப்போருமின்றி ஃபதக் சிற்றூர் கிடைக்கப் பெற்றதால் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அங்கிருந்த நிலம் முழுவதையும் தங்களின் சொந்த தேவைக்காக வைத்துக் கொண்டார்கள். மேலும் அதன் மகசூலை ஐந்து பகுதிகளாகப் பிரித்து அதில் நான்கு பங்கினை தங்களுக்காக வைத்துக் கொண்டு எஞ்சிய ஒரு பகுதியினை தங்கள் உறவினர்களுக்காகவும் ஏழை, அனாதை வழிப்போக்கர்களுக்காகவும் செலவிட்டனர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகு விட்டு நீங்கியதும், 'கைபரும், ஃபதக்கும் தங்களின் தந்தையாரின் சொத்தாகையால் அவை தங்களுக்கே வாரிசுரிமையாகக் கிடைக்க வேண்டும்' என்று, ஹஜ்ரத் ஃபாத்திமா (ரலி), முதல் கலீஃபா ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் கோரினார்கள்.

ஆனால் அபூபக்கர் (ரலி) அவர்களோ "நபி மார்களின் சொத்துக்களுக்கு வாரிசு கிடையாது" என்ற நபிமொழியை எடுத்துரைத்து,

"நபிமார்கள் விட்டுச் செல்லும் சொத்துகள் யாவும் சதகா ஆகும். அவற்றிற்கு வாரிசுரிமை கொண்டாட எவருக்கும் தகுதி கிடையாது. இதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் நபியவர்களின் காலத்தில் எவ்வளவு தரப்பட்டதோ அது இப்பொழுதும் தரப் படும் என்று கூறினார்கள்.



கலீஃபா அபூபக்கர் (ரலி) அவர்களின் தீர்ப்பு ஹஜ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தவே அவர்கள் மறு பேச்சு ஏதும் பேசாமல் சென்று விட்டார்கள்.

இந்த ஃபதக் நிலங்கள் பின்னர் உமைய்யா கலீஃபா மர்வானால் அபகரிக்கப்பட்டதெனக் கூறப்படுகிறது. ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் அந்நிலங்களை அண்ணல் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தாரிடமே மீண்டும் ஒப்படைத்தார்கள்.

அதுகண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தவர்களின் ஆதரவாளரான காரிஜிகள் மனம் மகிழ்ந்தனர் எனினும் உமைய்யாக்களோ ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் மீது வெறுப்பும் விரோதமும் கொண்டனர்.

உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் உமைய்யா களையைச் சேர்ந்தவராயிருந்தும், காரிஜிகளுக்கு ஆதரவளித்துத் தங்களைக் கேவலப்படுத்தி விட்டதாக எண்ணி உமைய்யாக்கள் பொருமினர். ஆனால் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தினர் உமைய்யாக்களால் அநீதம் இழைக்கப்பட்டனர் என்ற அவச்சொல் வரக்கூடாது என்பதற்காகவும், அவர்களை கண்ணியப் படுத்துவதற்காகவும், இவ்வாறு செய்தனர். எனினும் அதன் உட்கருத்து புரியாததால் உமைய்யாக்கள் துள்ளினர்.

இறுதியில் அவர்கள் தங்களுக்காகப் பரிந்துரைப்பதற்காக, உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் அத்தையை அவர்களிடம் அனுப்பிவைத்தார்கள்.

அப்பொழுது கலீஃபா அவர்கள் தம்முடைய அத்தை ஃபாத்திமா பிந்தி மர்வானிடம் பல விஷயங்களைப் பற்றி எடுத்துரைத்தார்கள்.

ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி), ஹஜ்ரத் உமர் (ரலி) ஆகியோர் போன்று இறைப் பொருத்தமான ஆட்சியை யஜீத் இப்னு முஆவியாவோ, மர்வானோ நடத்தவில்லை. முன்னவர்கள் பொதுச் சொத்தைப் பேணிக்காத்தார்கள்

பின்னவரோ பொதுச் சொத்தை தங்களின் சொந்தத் திற்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

மேற்கண்ட செய்திகளைப் பற்றித் தம் அத்தையிடம் அவர்கள் விவாதித்தார்கள். அவர்கள் கூறியதாவது:-

''குலஃபாயே ராஷிதீன்களாகிய அபூபக்கர் (ரலி), உமர்(ரலி) அவர்களுக்குமாற்றமாக யஜீதும், மர்வானும் நடந்து மக்களுக்கு அநீதம் புரிந்து விட்டார்கள். நான் கிலாஃபத்தை முந்தைய நிலைமைக்குக் கொண்டு வரத் தான் வேண்டும். இன்றேல் பயனேதும் இல்லாமற் போய் விடும்.

அவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்ட அவர்களின் அத்தை ஃபாத்திமா பின்த் மர்வான் மீண்டும் உமைய்யாக்களிடம் சென்று, ''நீங்கள்தாம் குற்றவாளிகள். நீங்கள் உங்களில் ஒருவருக்கு உமர் (ரலி) அவர்களின் பேத்தியை மணமுடித்தீர்கள். அவருக்குப் பிறந்த மகன், உமர் (ரலி) போன்றே இருக்கிறார்'' என்று கூறினர்.

ஒரு நாள் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் உமைய்யாக்களை விருந்துக்கு அழைத் தார்கள். உணவு சமைப்பதில் காலந்தாழ்த்துமாறு அவர்கள் சமையற்காரர்களைப் பணித்திருந்தனர்.

விருந்தினர்களோ வெகுநேரமாகியும் உணவுவராத தால் பசியால் வாடினர். அப்பொழுது உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் சமையற்காரர்களை சப்தமிட்டு ஏசுவது போன்று பாவனை செய்துவிட்டு, பொரிகடலையேனும் கொண்டு வருமாறு பணியாளர் களிடம் கூறினர். அவர்களும் பொரிகடலையைக் கொண்டு வந்து வைக்க, பசி மிகுதியால் உமைய்யாக் கள் விறுவிறுவென்று அவற்றை மென்று தின்றனர்.

சிறிது நேரம் கழித்து, விருந்தினருக்கு அறுசுவை உண்டி பரிமாறப்பட்டது. என்ன பயன்? பொரிகடலை யைத் தின்று தீர்த்ததால் விருந்தினர்களின் பசியும் தீர்ந்து விட்டிருந்தது; சுவையான உணவு அவர்களுக்கு படைக்கப்பட்டபொழுது அவற்றை அவர்களால் உண்ண முடியாமற் போயிற்று.

''பொரிகடலையே எங்கள் வயிற்றை நிரப்பிவிட்டது. உணவு வேண்டாம்'' என்று அவர்கள் ஒருமித்துக் கூறினர்.

அப்பொழுது கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள். உமையாக்களை நோக்கி, ''சகோதரர் களே! இப்பொரிகடலையே உங்களின் பசியைப் போக்கப் போதுமானதாய் இருக்கும் பொழுது, உங்களுக்கு உரிமையில்லாத மாற்றாரின் நிலங்களை உரிமை கொண் டாட நீங்கள் முனைவது ஏனோ?'' என்று வினவினர். அது கேட்டு அவர்கள் தலை குனிந்தனர்.

## பெரியார்களின் தொடர்பு

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) குர்ஆன் ஹதீஸ் ஆகியவற்றைக் கற்று அவற்றில் நல்ல தேர்ச்சியும் விளக்கமும் பெற்றுத் திகழ்ந்தார்கள். அக் காலத்தில் மதீனா நகரில் நபித்தோழர்கள் அவ்வளவாக இல்லாத போதினும் அவர்களிடம் ஹதீஸ்களைக் கற்ற தாபியீன்கள் ஏராளமானோர் இருந்தனர். ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் அப்பெரி யார்கள் அனைவரிடமும் ஹதீஸ்களைக் கற்றனர். சிறப் பான முறையில் கவிகள் புனையும் வண்ணம் அவர்கள் அரபிமொழிப்புலமையும்பெற்றுத்திகழ்ந்தார்கள். சுருங் கக்கூறின் அந்நாளில், அவர்கள் ஓர் சிறந்த மார்க்க மேதையாகவும், சட்டஞானியாகவும் திகழ்ந்தார்கள் எனில் அது மிகையாகாது.

எனவே, இயல்பிலேயே அவர்களிடம் சான்றோர் களை ஆதரிக்கும் நற்பண்பும், பெரியார்களை கண்ணியப் படுத்துப் பண்பாடும், ஆத்மஞானிகளிடம் அறிவுரைக் கேட்கும் அடங்கா வேட்கையும் மண்டிக்கிடந்தன,

ஒருமுறை ஹஜ்ரத் முஹம்மது இப்னு கஅப் கர்லீ (ரஹ்) அவர்களை சந்தித்த உமர் இப்னு அப்துல் அஜீஸ்

(ரஹ்) அவர்கள் ''நியாயம்'' என்ற பொருளைத் தமக்கு விளக்கிக் கூறுமாறு கேட்டார்கள்.

அதற்கு அப்பெரியார் பின்வருமாறு விளக்கம் கூறினார்கள்:-

''உம்மைக் காட்டினும் சிறிய வயதுள்ளவருக்கு நீர் தந்தை என்று எண்ணிக்கொள்வது நியாயம் ஆகும். உம்மைவிட வயதில் மூத்தோரை உம்முடைய தந்தையாகக் கருதுதல் நியாயம் ஆகும். உம்முடைய வயதினை ஒத்தாரை உம் சகோதரராக எண்ணுவது நியாயம். எவரேனும் குற்றமிழைப்பின் அவரை தண்டிப்பதுநியாயமே. எனினும் தன்னலத்திற்காவோ, அன்றி பெருமையின் பொருட்டாலோ எவருக்கும் ஒரு சவுக்கடி கூட அடித்தல் நியாயமல்ல. நேர்மைக்குப் புறம்பான அச்சவுக்கடி உம்மை நரகத்திற்கு அழைத்துச்சென்று விடக்கூடும்''.

❊ ❊ ❊

மற்றொரு முறை ஹஜ்ரத் அபூ குலாஃபா (ரஹ்) என்ற பெரியார் தம்மிடம் வந்த பொழுது, தமக்கு அறிவுரை நல்குமாறு வேண்டி நின்றார்கள் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள்.

அப்பொழுது அப்பெரியார் அவர்களை நோக்கி, ''ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள் முதற்கொண்டு இந்நாள்வரை தங்களைத் தவிர்த்த உலக மன்னர்கள் அனைவரும் இறந்து போனார்கள். அல்லாஹ் உங்களுக்குத் துணையாக இருப்பின் நீங்கள் எவருக்கும் அஞ்சத்தேவையில்லை. ஆனால் அவனுடைய ஆதரவு உங்களுக்கில்லையாயின் உங்களைக் காப்பவர் யார்?'' என்று கூறினார்கள்.

❊ ❊ ❊

ஒருமுறை ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், அறிஞர் இப்னு குர்த்தபா (ரஹ்) அவர்களைச் சந்தித்த பொழுது தமக்கு, ''நீதி வழங்குவதன் இலக்கணம்'' பற்றி அறிவுரை நல்குமாறு வேண்டிக் கொண்டார்கள்.



அதற்கு அப்பெரியார், ''உமரே! அவரவரின் குற்றத்திற்கும், உடலின் நிலைமைக்கும் ஏற்றவாறு தண்டனையளிப்பீராக! எனினும் எச்சரிக்கையாயிரும்! நீர் சினமுற்றிருக்கும் வேளையில் தீர்ப்பளிக்கவோ, தண்டனை விதிக்கவோ வேண்டாம். அவ்வாறு செய்யின் உம்முடைய தங்குமிடம் நரகமாகிவிடும்'' என்று அறிவுறுத்தினார்கள்.

❊ ❊ ❊

மதீனா நகரின் ஏழு மார்க்க விற்பன்னர்களுள் உபைதுல்லாஹ் இப்னு அப்துல்லாஹ் (ரஹ்) என்பவரும் ஒருவராவார். அவ்வறிஞர் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் சமகாலத்தவராவார். ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊதின் சகோதரரின் பேரராகிய அவர் சிறந்த தாபியீன்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இப்னு அப்பாஸ், அபூஹுரைரா, உம்முல் மூஃமினின் ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) ஆகியோரிடம் அவர் ஹதீஸ் கலையைப் பயின்றார். பின்வந்த பேரறிஞர்களான அபுஸ் ஸினாத், அஸ்ஸுஹ்ரி ஆகியோரின் உஸ்தாதாகத் திகழ்ந்த அவரின் கல்வியை ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல அஜீஸ் (ரஹ்) அவர்கள் பெரிதும் போற்றினார்கள். உபைதுல்லாஹ்வுடன் உரையாடுவதையும் அவர்கள் பெரிதும் விரும்பினார்கள்.

அந்த அறிஞரைப் பற்றி அவர்கள் கூறுகையில், ''உபைதுல்லாஹ்வுடன் உரையாடுவது, இவ்வுலகத்தையும், இவ்வுலகில் உள்ள அனைத்தைக் காட்டினும் மேலானது'' என்று குறிப்பிட்டார்கள்.

அவரைப்பற்றி மற்றொரு நாள் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்:—

''அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கூறுகிறேன். நான் ஒரு மாலை நேரத்தில் உபைதுல்லாஹ்வுடன் உரையாடுவதற்குப் பகரமாக அரசுப் பொது நிதியிலிருந்து ஆயிரம் பொற்காசுகள் எடுத்துத் தரத்தயார். அத்துணை நற்பயன் அவ்வுரையாடல் மூலம் ஏற்படுகிறது.''

அதுகேட்ட ஒருவர், ''பொது நிதியிலிருந்து செலவழிப்பதில் மிக்கக் கண்டிப்பானவர்களான தாங்களா அவ்வாறு கூறுகிறீர்கள்?'' என்று வினவ,

''ஆம்! அல்லாஹ்வின் மீது ஆணையாக அவரின் அறிவுரையையும், வழிகாட்டுதலையும் பெற ஓராயிரம் என்ன, பல்லாயிரம் பொற்காசுகளை பொது நிதியிலிருந்து செலவழிக்கவும் நான் சித்தமாயுள்ளேன். அவருடன் உரையாடுவது அறிவுக்கு வளத்தையும், உள்ளத்திற்கு அமைதியையும் வழங்குகிறது. கவலையைப்போக்கி நல்லொழுக்கத்தை நல்குகிறது.'' என்று விடையளித்தனர் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள்.

## நிர்வாகத் திறமைகள்

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், பொறுப்பும் திறமையும் மிக்க ஓர் நிர்வாகியாக செயல் பட்டு மக்களுக்கு மகிழ்ச்சியூட்டக் கூடிய நல்லாட்சியை நல்கினார்கள் எனில் அது மிகையாது.

அமைச்சர்களாலோ, அரசு அதிகாரிகளாலோ பொது மக்களுக்கு அணுவளவும் தீங்கு நடந்து விடக் கூடாது என்பதில் திறமையான நோக்குடன் செயல் பட்டார்கள்.

எடுத்துக்காட்டிற்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

ஒருமுறை கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், ஒரு மனிதரை ஓரிடத்திற்கு அதிகாரியாக நியமித்தார்கள். அப்பொழுது பலர், ''அம்மனிதர் கொடுங்கோலன் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃபிடம் பணியாற்றியவர்'' என்று கலீஃபாவிடம் வந்து கூறினார்கள்.

உடனே கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் அம்மனிதரை பதவி நீக்கம் செய்தார்கள்.



அப்பொழுது அம்மனிதர் அவர்களிடம் ''நான் ஹஜ்ஜாஜிடம் சிறிது காலம்தான் பணியாற்றினேன்'' என்று கூறினார்.

அதுகேட்ட அவர்கள், ''நீ கெட்டவனாக ஆவதற்கு அவனுடன் ஒரு நாளன்று அதைவிடக் குறைவாக இருந்தாலே போதுமானது'' என்று கூறினார்கள்.

ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப், கலீஃபா அப்துல் மலிக் இப்னு மர்வானிடமும், அவரையடுத்து, கலீஃபா வலீத் இப்னு அப்துல் மலிக்கிடமும், பஸ்ராவின் ஆளுநராகப் பணியாற்றியவர். பெரும் பெரும் நபித்தோழர்களையும் ஆத்ம ஞானிகளையும், பேரறிஞர்களையும் அவன் துன்புறுத்தினான். பெரியார்களைக் கொன்றான். மக்களை நாயினும் கீழாக நடத்தினான்.

நபித்தோழர் ஹஜ்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரலி) அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரலி) ஹஜ்ரத் ஹஸன் பஸரி (ரஹ்) போன்ற பெரியார்களையெல்லாம் அவன் கீழ்த்தர வார்த்தைகளால் ஏசி நோவினைச் செய்தான். கலீஃபா வலீதின் காலத்தில் அவன் இறந்தான். அவன் இறந்ததும் மக்கள் நிம்மதியுற்று அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினர். எனவேதான் அக்கொடியோனிடம் பணியாற்றிய எவரையும் பதவியிலமர்த்த கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் அஞ்சினர்.

கண்டிப்பாய் நடக்க வேண்டிய பொழுது அவர்கள் கண்டிப்பாக நடந்து கொண்டனர். நாட்டில் கலகம், புரட்சி போன்றவை அவர்களின் ஆட்சியில் ஓரளவு அடங்கியே இருந்தது. காரிஜிகள் கலகம் விளைவிக்க முயன்ற பொழுது அவர்கள் வாளேந்தத் தயங்கவில்லை. உமையாக்களாகிய அவர்களின் உறவினர்கள் கூட அவர்களிடம் உள்ளூர விரோதம் கொண்டிருந்தது விதிவசமேயாகும்.

காரணம், நீதி என்னும் பொழுது பொதுமக்களையும் தங்கள் உறவினர்களையும் அவர்கள் சரிசமமாய் நிறுத்தி விசாரணை செய்து நீதியின் பக்கம் சார்ந்து நின்றதேயாகும்.

கலீஃபா வலீத் ஆட்சி செய்த பொழுது, முஸ்லிமல்லாதவரின் நிலம் ஒன்றினைப் பிடுங்கித் தம் மகன் அப்பாஸுக்குக் கொடுத்திருந்தார். அவ்வழக்கு உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களிடம் வந்தது. அவர்கள் உரிய முறையில் அவ்வழக்கை விசாரித்து, அதற்குரிய வரான முஸ்லிமல்லாதவரிடமே அந் நிலத்தை ஒப்படைத்தனர். அப்பொழுதவர்கள் ''திருமறையினைக்காட்டினும் கலீஃபா வலீதின் பத்திரங்கள் ஒன்றும் உயர்ந்ததன்று'' என்று அவர்கள் கூறி அப்பாஸ் தம்மிடம் காட்டிய பத்திரங்களைத் தள்ளுபடிச் செய்தனர்.

அவர்களின் ஆட்சியில் பிறமதத்தினருக்கும் உரிய சுதந்திரம் வழங்கப்பட்டது. அதற்கு மேற் கூறப்பட்ட நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டு ஆகும். பிறமதத்தவரின் உடமைகளுக்கு அரசாங்கம் போதிய பாதுகாப்பு நல்கியது.

ஒருமுறை ஷீராவ் என்னும் ஊரில் ஒரு முஸ்லிம், முஸ்லிமல்லாத ஒருவரைக் கொன்று விட்டார். உடனே கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், அம் முஸ்லிம் கொலையாளியைப் பிடித்து கொல்லப்பட்ட முஸ்லிமல்லாதவரின் குடும்பத்தவரிடம் ஒப்படைத்து விட்டார்கள். அவர்கள் அம் முஸ்லிமை பழிக்குப்பழி வாங்கிக் கொண்டார்கள்.

மற்றொரு முறை ஹிஷாம் இப்னு மாலிக் (உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களுக்குப் பின்னர் கலீஃபாவாக பதவி வகித்தவர்) மீது ஒரு கிறிஸ்தவர் வழக்கு தொடுத்தார்.

அப்பொழுது கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் ஹிஷாமை, கிறிஸ்தவருடன் சரிசமமாக நிறுத்தினார்கள். அப்பொழுது ஹிஷாம் அக்கிறிஸ்தவரை ஏச, உடனே அவர்கள்,

''ஒழுங்காக நடந்து கொள்ளும். இன்றேல், உரிய தண்டனை பெற வேண்டிவரும்'' என்று எச்சரிக்கை செய்தது, வரலாற்றில் பொன்னேடுகளால் பொறிக்கத் தக்கதாகும்.



காரணம், ஹிஷாம், அவர்களின் மைத்துனர் ஆவார். அவர்களுக்குப் பின் கலீஃபா ஆகி கி. பி. 724 முதல் கி. பி. 743 வரை சுமார் 20 ஆண்டுகள் ஆட்சி செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தம்முடைய ஆட்சிக்காலத்தில் முஸ்லிமல்லாத பல அரசர்களுக்கு இஸ்லாத்தைத் தழுவுமாறு அழைத்து மடல் வரைந்தார்கள்.

அவர்களின் நீதி நேர்மை, நல்லொழுக்கம், உண்மை ஆகியவற்றின் விளைவாக, அவர்களின் மடல்களுக்கு மாற்றுமத மன்னர்களிடம் நல்ல வரவேற்பிருந்தது.

சிந்து நாட்டு மன்னர்களும் மாவராவுன்னஹர் மன்னர்களும் இஸ்லாத்தைத் தழுவினர். அது மட்டுமா? அவர்களின் நேர்மையைக் கண்டு ஏராளமாக மாற்று மதத்தினர் இஸ்லாத்தைத் தழுவினர்.

அதுகண்ட எகிப்தின் ஆளுநர் ''மாற்று மதத்தவர் இவ்வாறு தொடர்ந்து இஸ்லாத்தைத் தழுவுவதால் ஜிஸ்யாவரி வசூல் குறைந்து விடுமே'' என்று கடிதம் எழுதிய பொழுது,

''அனைவரும் இஸ்லாத்தைத் தழுவுவது நமக்கு மகிழ்ச்சிதானே! அண்ணல் நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் (ஜல்) நேர்வழியைப் பரப்பும் இறைத்தூதராக அனுப்பினானேயொழிய ஜிஸ்யா வசூலிப்பவராக அனுப்பவில்லை'' என்று கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் விடை எழுதி அனுப்பினார்கள்.

மற்றொருவர், ''இதனால் அரசுக்கு வருவாய் குறைந்து விடுமே!'' என்று எழுதிய பொழுது, அதற்கவர்கள், ''அதனால் என்ன! குறையட்டுமே! நாமனைவரும் ஏர்பிடித்து வயலில் உழுது, நமக்கான உணவை பெற்றுக் கொள்ளலாமே'' என்று பதிலெழுதினார்கள்.

வரிவசூலிப்பதில் அவர்கள் மிக்க தாராளத்துடன் நடந்து கொண்டதை உலக வரலாற்றில் வேறு எந்த மன்னரின் வாழ்க்கையிலும் காணமுடியாது. அவர்களின் நேர்மையை உணர்ந்த மக்கள் தாங்களாகவே முன்வந்து வரிசெலுத்திச் சென்ற காட்சி உலகில் வேறெங்கும் எப்பொழுதும் காண முடியாததாகும்.

அப்துல் மலிக் இப்னு மர்வான் வலீத் இப்னு அப்துல் மலிக் ஆகிய கலீஃபாக்களின் ஆட்சியில் ஆளுநர் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் முஸ்லிம்களை அடித்து உதைத்து நசுக்கிப்பிழிந்து வரிவசூலித்தார். ஆனால், ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களோ தாமும் நேர்வழியில் நின்று மக்களையும் அல்லாஹ்வின் பாதையில் செலுத்தி அன்புடன் ஆட்சி நடத்தினார்கள். எனவே, முன்னவர்களின் ஆட்சியைக் காட்டிலும் இவர்களின் ஆட்சியில் வரிவசூல் இருமடங்காகி, கருவூலம் நிரம்பி வழிந்தது. அதனால் நாடு வளம் கொழித்தது. இரந்துண்டு வாழ்வோர் இல்லாத நன்னிலையை நாடு எய்தியது.

நாட்டில் அனைவரும் உழைத்துண்டு வாழவேண்டும் என்று கருதிய கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், உழைக்க முடியாதவர்களான முதியோர் நோயாளர்கள் ஆகியோரின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டனர்.

பட்டியல் தயாராகி அவர்களின் பார்வைக்கு அது கொண்டு வரப்பட்டபொழுது, பொது நிதியிலிருந்து பணத்தை அள்ளி அவர்களுக்கெல்லாம் வழங்கினார் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள்.

அப்பொழுது அரசாங்க அலுவலர்கள் அவர்களிடம் வந்து, ''இவ்வாறு இம்மக்களுக்கு வாரி வழங்கின், இறுதியில் கருவூலமே காலியாகவிடும்'' என்று கூறினர்.

அதுகேட்ட அவர்கள், ''கருவூலத்தில் இருப்பது அல்லாஹ்வின் பணம், அது இருக்கும் வரை அதனை அவனின் அடியார்களுக்கு கொடுத்துக் கொண்டே



இருங்கள். அது காலியாகிவிடின் அதனைக் குப்பையைப் போட்டு நிரப்புங்கள்'' என்று கூறினார்கள்.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் பொதுமக்களின் நலன்கருதி செய்த நற்பணிகள் கணக்கிலடங்கா. அவர்கள் தம்முடைய ஆட்சியின் பொழுது ஏராளமான கிணறுகள் தோண்டினர். தங்குமிடங்களையும், மருத்துவமனைகளையும் கட்டினர்.

## சொற்பொழிவு

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் மக்களைத் திருத்துவதிலும் மார்க்க நெறிமுறைகளை மக்களிடையே பரப்புவதிலும் மேற்கொண்ட முயற்சிகள் கொஞ்ச நஞ்சமல்ல. கிலாஃபத், குர்ஆன்-ஹதீஸின் அடிப்படையில் அமைய வேண்டும். மன்னராட்சி என்பது இஸ்லாத்தில் கிடையாது. குடியரசைத்தான் இஸ்லாம் போதிக்கிறது. குடியரசைத்தான் இஸ்லாம் கிலாஃபத் என்று கூறுகிறது'' என்பது அவர்களின் கருத்தாக இருந்தது.

கிலாஃபத்திற்கு எடுத்துக் காட்டுகள் ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி), ஹஜ்ரத் உமர் (ரலி) ஆகிய இருவரின் ஆட்சிகளாகும். அவற்றிற்கு பின்னர், ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் ஆட்சி இஸ்லாமிய ஆட்சி முறைக்கு இலக்கணம் வகுத்தது. எனினும் அவர்களுக்குப்பின் வந்த உமையா அல்லது அப்பாஸிய்யா கலீஃபாக்கள் அவ்விலக்கணத்திற்கு அணை போட்டுவிட்டு மாற்று மத ஆட்சியாளர்களைப் போன்று ஆட்சி செய்தது விதிவசம் என்றுதான் கூற வேண்டும்.

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேறுபாடின்றி பலதரப்பட்டோருக்கும் அறிவுரை பகர்ந்தனர்.

ஒருமுறை அவர்கள் மக்களைப்பார்த்து பின்வருமாறு சொற்பொழிவாற்றினார்கள்:—

"அன்புமக்களே! நீங்கள் வீணுக்காகப் படைக்கப்பட்டிருப்பதாக எண்ணிக்கொண்டீர்களா? இல்லவே இல்லை. மகத்தான நோக்கத்திற்காகவே படைக்கப்பட்டுள்ளீர்கள் இது உண்மையா? பொய்யா? 'உண்மை தான்' என்று நீங்கள் கூறுவீர்களாயின் நிச்சயமாக நீங்களனைவரும் மூடர்களே! ஏன் தெரியுமா? உண்மை என்றறிந்த பின்னும் அதற்காக நீங்கள் எவ்வித முயற்சியிலோ செயலிலோ ஈடுபடவில்லையே அதனால்தான்.

நான் சொன்னது பொய்யென்று நீங்கள் கூறின், நீங்கள் அக்கிரமக்காரர்கள் என்றே நான் உரைப்பேன். ஏன் தெரியுமா! உண்மையை மறுப்பவர்கள் அக்கிரமக்காரர்கள் தாமே!

நீங்கள் மறுமைக்காக படைக்கப்பட்டுள்ளீர்கள். இன்றைக்கில்லாவிடினும், என்றேனும் ஒருநாள் இவ்வுலகு நீத்து, மறு உலகிற்கு நீங்கள் சென்றே தீர வேண்டியுள்ளது. அதனை நீங்கள் உணரவில்லை. காரணம் இங்குள்ள பகட்டான (பொய்யான) இன்பங்கள் உங்களை மறுமையின் விஷயத்தில் கவனக் குறைவாக ஆக்கிவிட்டன. இதனை விட்டுத் தள்ளுங்கள் வரப்போவதுதான் இன்பமான வாழ்க்கை. அத்தகைய இன்ப வாழ்வில் வெற்றிக்கொடி நாட்ட இன்றே அதற்கான முயற்சியில் ஈடுபடுங்கள்."

இவ்வாறு மறுமையைப் பற்றி மக்கள் உள்ளங்களில் ஆழமான வித்துகளை ஊன்றுவதில் அவர்கள் முன்னணி வகித்தார்கள்.

அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் மறுமை, மறுமை, மறுமை. இதனை முஸ்லிம்கள் அனைவரும் உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்று அவர்கள் தீரா வேட்கை கொண்டார்கள்.

## கலீஃபாவின் மாளிகை!

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் நல்லாட்சி நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது டமாஸ்கஸ் நகரையடுத்த ஓர் சிற்றூரில் மூதாட்டி



யொருத்தி வசித்து வந்தாள். அவளுக்கு உற்றதுணை அல்லாஹ்வைத் தவிர மனிதர்களுள் எவருமில்லை.

அவள் வாழ்ந்து வந்ததோ ஒரு சிறு குடிலில். அக்குடிலோ நாளுக்கு நாள் இடிந்து விழுந்து கொண்டிருந்தது. அப்பொழுது அவளின் நா, "இறைவா! இவ்வுலகில் ஆதரவற்ற எனக்கு 'இக்குடில் மட்டுமே புகலிடமாக உள்ளது? இதுவும் இடிந்து தரைமட்டமாகிவிடின் நான் எங்கே செல்வது?" என்று கூறிப் புலம்ப, அவளின் கண்களோ நீரைச் சொரிந்தன.

அப்பொழுது அவளுடைய உள்ளத்தில் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் நினைவு வந்தது. அவர்களோ டமாஸ்கஸ் நகரில் வசிக்கிறார்கள்! அவள் உள்ளம் எண்ணியது இவ்வாறு: கலீஃபா உமரோ மிக்க இரக்க உள்ளம் படைத்தவர்; அவரிடம் சென்று நம் இயலாமையையும் ஏழ்மையையும் எடுத்துரைப்பின் அவர் ஆவன செய்வார். இத்தகைய எண்ணம் உதித்தவுடன் அவளது கால்கள் கலீஃபாவின் மாளிகையை நாடித் தாமாகவே நடந்தன.

டமாஸ்கஸ் நகரை அம்மூதாட்டி வந்தடைந்த பொழுது அங்கு வானளாவ ஓங்கி நின்ற மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் அவளுக்குப் பெரும் வியப்பையும் திகைப்பையும் ஊட்டின. இத்துணைப் பெரிய நகரத்தில் கலீஃபாவின் மாளிகையை எவ்வாறு கண்டறிவது. ஏழ்மையும் முதுமையும் என்னை வாட்டுகின்றன. இந்நிலையில் என்னை இப் பெருநகரில் எவர் மதிப்பார்? உரிய முறையில் எனக்கு பதில் கூறுவோர் இங்கிருப்பரோ என்பது கூட ஐயமே! என்றெண்ணியவளாக வீதிவழியே சென்று கொண்டிருந்தாள்.

அங்கு அவள் கண்களுக்கு ஓர் சிறு குடிசை தென்பட்டது. அங்குசென்ற அவள், அக்குடிலுக்குரியோரை விளித்து,

"அம்மணி! எனக்கு தாகமாகவுள்ளது. அருந்தச் சிறிது தண்ணீர் தாருங்கள்" என்று கேட்டாள்.

மூதாட்டியின், அழைப்போசைக் கேட்டுஉள்ளிருந்து ஒரு பெண் வந்தார். அவர் அம்மூதாட்டியின் மீது இரங்கி தண்ணீர் தந்தார். அத்துடன், சில ரொட்டித் துண்டுகளையும் கொடுத்து, ''உண்ணீர்! உண்ணீர்!'' என்று கூறினார்.

முதலில் வேட்கை தணித்துப் பின்னர், ரொட்டியை உண்ட மூதாட்டி அக்குடிலுக்குரிய பெண்ணை நன்றிப் பெருக்குடன் நோக்கி,

''அம்மா! இந்நாட்டை ஆளும் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் வாழும் அரண்மனை எங்குள்ளது என்பதை நீ அறிவாயோ!'' என்று வினவ,

அதற்கு அப்பெண் ''தாயே! தாங்கள் கேட்ட கலீஃபாவின் மாளிகையை நான் நன்கறிவேன். அது இதுதான்'' என்று அக்குடிலையே கலீஃபா வசிக்கும் இடம் எனக் கூறினார்.

அது கேட்ட மூதாட்டிக்கு பேச நா எழவில்லை. ஆ! ஈஃதென்ன விந்தையிலும் விந்தையாக உள்ளதே! பெரும் மாளிகையில் வாசம் செய்ய வேண்டிய கலீஃபா சிறு குடிலிலா? இஃது சாத்தியமாகுமா? என்றெல்லாம் அவள் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது, அங்கு ஓர் ஏழை மனிதர் வந்தார். அவரோ அம்மூதாட்டியைக் காட்டினும் ஏழையாகத் தானிருக்க வேண்டும்.

'இவரும் என்னைப்போன்றே கலீஃபாவின் உதவியை எதிர்பார்த்து இங்கு வந்துள்ளாரரோ!' என்று மூதாட்டி அம்மனிதரைப் பார்த்து எண்ணினாள்.

அப்பொழுது, அக்குடிலுக்குரிய பெண் அங்கு வந்து, அம்மூதாட்டியை நோக்கி, ''தாயே, இந்நாட்டையாளும் கலீஃபாவைக் காணவேண்டும் என்று விழைந்தீர்களே! இதோ! இவர்தாம் அக்கலீஃபா. இவரிடம் தங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம் என்று கூறினார்.



இது மூதாட்டிக்கு இரண்டாவது வியப்புச் செய்தியாக இருந்தது. அவளுக்கு ஏதும் புரியவில்லை. 'என் எண்ணத்திற்கு மாற்றமாகவன்றோ அனைத்தும் உள்ளன. கலீஃபா என்னைகாட்டினும் பல்லாயிரம் மடங்கு வசதி மிக்கவராய் இருப்பார் என்றெண்ணித் தானே அவரைத் தேடி நான் வந்தேன். உண்மையில் பார்க்கின் இந்நாடாளும் கலீஃபா என்னைக் காட்டினும் வறிய நிலையிலன்றோ உள்ளார்! அவரைப் பார்க்கையில் என் நிலை பன்மடங்கு மேலென்றே எண்ணுகிறேன். இந்நிலையில் பாவம் கலீஃபாவிடம் நான் என்ன உதவி கேட்க முடியும்?' என்றெண்ணிய அவள், தான் வந்த நோக்கத்தை கலீஃபா விடம் கூறாத நிலையிலே அங்கிருந்து சென்று விட்டாள்.

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களும், அவர்களின் உத்தமத் துணைவி ஃபாத்திமாவும் எவ்வளவோ வற்புறுத்தி வினவியும், தான் வந்த நோக்கத்தைக் கூறாத நிலையிலேயே அம்மூதாட்டி அங்கிருந்து சென்று விட்டாள்.

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தம்முடைய ஆட்சியில், வறுமை வாய்ப்பட்ட ஓர் கிழவியைக் காட்டிலும் வறிய நிலையில் வாழ்ந்த எளிய வாழ்க்கையை என்னென்று சொல்வது ?

## கலீஃபாவின் ஏழ்மை

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களுக்கு முன் ஆட்சி செய்த உமையயாக்களான கலீஃபாக்கள் பெரும் பெரும் அரண்மனைகளில் வீற்றிருந்து பெருமையுடன் ஆட்சி செய்த பொழுது, இவர்களோ எளிய கூடாரத்தில் அமர்ந்து ஆட்சி செய்தனர். முன்னவர்கள், வசதி மிகுந்த ஆடம்பர மாளிகைகளில் தம் மனைவி மக்களுடன் வசித்து இப்பூவுலகிலேயே சுவன வாழ்வு வாழ்ந்தனர். ஆனால் இவர்களோ குடிசைகளிலேயே மிக்க எளிமையான குடிசையில் தம் மனைவி மக்களுடன் வாழ்ந்து காலத்தைக் கழித்தனர்.

வறிய வாழ்வு, அவர்களைத் தேடி வரவில்லை. அவர்களே அதனைத் தேடிச் சென்று அடைந்தனர். ஏழ்மை அவர்களின் இல்லக்கதவைத் தட்டவில்லை. அவர்கள் தாம் வலியச் சென்று ஏழ்மையின் கதவைத் தட்டினர்.

குடிசை வாழ்வு அவர்களின் தலைவிதியாக அமையவில்லை. மாளிகை வாழ்வை வெறுத்துத் தாமாகவே சிறுகுடிலை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். தம் உடைமைகளையும், நகைகளையும் விற்கவேண்டிய நிலையை இறைவன் அவர்களுக்கு ஏற்படுத்தவில்லை. அவற்றைப் பொது நிதியில் சேர்த்து தம் மனைவியின் கோலத்தை பஞ்சையாய், பராரியாய் ஆக்க அவர்களே விரும்பினார்கள்.

கிழிந்த ஒட்டுபோட்ட ஆடை அணியும் நிலை அவர்களுக்கு வந்ததா? முன்னோர்களான பெரியார்கள் ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களின் பிரதிபலிப்பே அது. பசி பட்டினி அவர்களுடன் பிறந்த நோயா? இல்லவே இல்லை அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழி முறைகளுள் அதுவும் ஒன்று.

கலீஃபாவுக்கு இந்நிலை ஏனோ? என்று மக்கள் கலீஃபாவின் மீது இரக்கம் காட்டினர். பெரியார்களும், கல்விமான்களும், சான்றோர்களும் கலீஃபாவின் நட்பைப் போற்றி வரவேற்றனர். கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் வழி காட்டல், திருக்குர்ஆன்—திருநபி வழியின் வழிகாட்டல் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டனர். எங்கும் எப்பொழுதும் மார்க்கத்தைப் பற்றிய பேச்சே பேசப்பட்டது. வீண் பேச்சுக்களும், வீண் விளையாட்டுகளும் விடை பெற்றன.

கலீஃபா எனப்படுபவர் ஓர் முன் மாதிரியாக இருந்தாலொழிய மக்கள் நேர்வழியில் நடக்க இயலாது என்பதை உணர்ந்த ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் திருக்குர்ஆன் நபிவழிக்கேற்பத் தம்மை எந்த அளவிற்கு மாற்ற முடியுமோ அந்த அளவிற்கு மாற்றிக் கொண்டார்கள்.



''சுவனத்தின் வாயிலில் நின்று நோக்கிய பொழுது அதில் பெரும்பாலும் ஏழைகளே நுழைந்து கொண்டிருந்தனர்.''
—புகாரீ

''என்னை உங்களின் ஏழைகளிடையே தேடுங்கள்''
—ஸுனன்

''ஏழைகள் செல்வர்களை விட (மறுமையின்) அரை நாளான ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் சுவனம் செல்வர்.''
—திர்மிதி

போன்ற நபிமொழிகளுக்கொப்ப அவர்கள் ஏழ்மையையே தம்முடைய ஆடைகளாகவும், அணிகலன்களாகவும் ஆக்கிக் கொண்டார்கள்.

அவர்களின் ஏழ்மை எந்த அளவிற்கு இருந்ததென்று பாருங்கள்:-

ஒரு நாள் அவர்கள், தம் மகள் ஆமினா என்னும் சிறுமியைக் காண விரும்பினார்கள். ஆனால் அக்குழந்தைக்கே உடுத்த சரியான ஆடையில்லாமல் இருந்தது. கிழிந்து கந்தலான ஆடைகளுடன் அது இருந்தமையால் தந்தையிடம் அக்குழந்தையால் வர இயலவில்லை. அந்நிலையினைக் கண்ட அதன் அத்தை புதிய அழகிய ஆடையொன்றை வாங்கி அணிவித்து பின்னர் அச்சிறுமியை அவர்களிடம் அனுப்பி வைத்தார்.

இவ்வாறு கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தமக்கென ஒரே கிழிந்த ஆடையை வைத்திருந்த அதே வேளையில் தம்முடைய மனைவி மக்களையும் அத்தகைய நிலையிலேயே இருக்குமாறு செய்தனர் என்பதை இந்நிகழ்ச்சியின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு நாள் அவர்களின் மகன் அவர்களிடம் வந்து, ''எனக்கும் புத்தாடை தைத்துத் தாருங்கள்'' என்று வேண்டினார்.

அப்பொழுது அவர்கள், ''என் கண்ணே! என்னிடம் அதற்கான பணம் இல்லை. நம்மிடம் உள்ள விரிப்புத் துணியைக் கிழித்து சட்டை தைத்துக் கொள்!'' என்று கூறினார்கள்.

பெருநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. நாட்டில் மக்கள் அதற்காக புத்தாடைகள் தைப்பதில் மும்முரமாக இருந்தனர். பலகாரங்களும், இனிப்புகளும் செய்வதில் சுறுசுறுப்பாகச் செயல் பட்டனர்.

அரண்மனை வளாகத்தில் சொல்லவா வேண்டும்? உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் உறவினர்கள் அனைவரும் அரச பரம்பரையினரன்றோ? எனவே அவர்களும் பெருநாளுக்காக ஆவன செய்வதில் முழு மூச்சாய் மூழ்கி விட்டிருந்தனர்.

அரசக்குழந்தைகள் பட்டுப் பீதாம்பரங்களில் புரண்டனர். அந்தப்புரப் பெண்களுக்கோ பெருநாளுக்காக அதிஅற்புத ஆடைகள் உருவாகிக் கொண்டிருந்தன.

ஆனால் கலீஃபாவின் இல்லத்தில்?...

அவர்களின் அருமை மனைவி ஃபாத்திமா தம் கணவரை நோக்கி,

''பிள்ளைகளுக்குப் பெருநாளுக்காக புத்தாடை வாங்கித் தரக் கூடாதா? நம் குழந்தைகள் மற்றக் குழந்தைகளைப்பார்த்து, தமக்கும் புதுத்துணி வேண்டுமெனக் கேட்டு அழுகின்றனவே!'' என்று கூறினார்.

அதுகேட்ட கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், ''என்னிடம் அதற்கான பணம் இல்லையே!'' என்று கூறினார்கள்.

அதற்கம்மாதரசி, ''தங்களின் சம்பளத்திலிருந்து ஒருவாரச் சம்பளத்தை முன்பணமாகப் பெற்றுவது தாருங்களேன்'' என்று கேட்க,

அதற்கு அவர்கள், ''ஒருவாரச் சம்பளத்தை முன் பணமாகப் பெறுவது இருக்கட்டும். அந்த ஒருவாரம் வரைநான் உயிரோடிருப்பேன் என்றோ அன்றி அதற்குள் பதவி நீக்கம் செய்யப்படமாட்டேன் என்றோ உன்னால் நிச்சயமாகக் கூற இயலுமா?'' என்று கேட்க, அதற்கம்மாதரசி மறுமொழியேதும் கூறாது இருந்தார்.



அப்பொழுது அவர்கள், அவரை நோக்கி, ''ஃபாத்திமாவே! இவ்வுலகில் சிறிதுகாலம் துன்பங்களை சகித்துக் கொள்வது மறுமையில் நீண்டகாலம் நரகத்துன்பங்களை நுகர்வதைக் காட்டினும் மிக்க மேலானது'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

ஒரு முறை கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் ஹஜ்ஜு செய்ய விரும்பி, தம் ஊழியரை நோக்கி,

''என்னுடைய பணம் எவ்வளவு இருக்கிறது? என்று கணக்கிட்டுச் சொல்லும். நான் ஹஜ்ஜு செய்ய வேண்டும்'' என்று வினவ,

அதற்கவர், ''தங்களின் பணம் பத்து அல்லது பனிரெண்டு தீனார்கள்தாம் என்னிடம் இருக்கும், அதைக் கொண்டு ஹஜ்ஜு செய்ய முடியுமா? என்ன?'' என்று கேட்டார்.

எனினும் சில நாட்களில் அவர்களின் சொந்த நிலத்திலிருந்து அவர்களுக்குரிய பணம் வந்தது. அப்பணம் ஹஜ்ஜு செய்ய போதுமானதாகவும் இருந்தது. அது பற்றி கலீஃபாவிடம் அவரது ஊழியர் எடுத்துரைத்து ஹஜ்ஜுக்குப் புறப்படுமாறு வேண்டிக் கொண்டபொழுது அதற்கவர்கள்,

''என்னுடைய நிலத்திலிருந்து வந்த பலனை இதுநாள் வரை நானே நுகர்ந்து வந்தேன். இனி அதன் பலனை மக்கள் நுகரட்டும். எனவே அப்பணத்தைப் பொது நிதியில் சேர்த்துவிடும்!'' என்று கூற, அவரும் அவ்வாறே செய்தார்.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபா ஆவதற்கு முன் அவர்களுக்கு ஏராளமான நிலங்கள் சொந்தமாயிருந்தன. அவற்றிலிருந்து ஆண்டுதோறும் அவர்களுக்கு 50000 தீனார்கள் வருமானமாக வந்தது.

ஆனால் அவர்கள் கலீஃபாவாக பதவியேற்றதும் அந் நிலங்களை அவர்கள் அரசுப் பொது நிதியில் சேர்த்து விட்டனர். ஆண்டுதோறும் அவர்களுக்குக் கிடைத்த 200 பொற்காசுகளைக் கொண்டு அவர்கள் குடும்பம் நடத்தினார்கள். அவர்களுக்கு ஆன உணவுச் செலவு நாளொன்றிற்கு இரண்டு திர்ஹம்களுக்குள்ளாகவே இருந்தது.

## பசியால் வாடிய கலீஃபாவின் மக்கள்

உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் உறவினர்களும், அமைச்சர்களும், அதிகாரிகளும் மற்றவர்களும், குடிமக்களும் பசி பட்டினியின்றி இன்ப வாழ்வு வாழ்ந்தபொழுது, கலீஃபாவோ பசியாலும், பட்டினியாலும் வாடினார்கள். அவர்களின் குடும்பத்தினருக்கும் அதே நிலைதான்.

ஒருநாள் அவர்கள் தம்முடைய பெண்மக்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களின் மக்கள் வாயை நன்கு திறந்து பேசாது, உதடுகளை மூடிய வண்ணம் பேசினர். அப்பொழுது கலீஃபா அவர்கள், அவர்களை நோக்கி,

''ஏன் உதடுகளை மடித்துக் கொண்டு பேசுகிறீர்கள்? நன்றாக வாயைத் திறந்து பேசுவது தானே!'' என்று கூற,

அதற்குப் பெண்கள், ''தந்தையீர்! இன்று உண்பதற்கு வீட்டில் எதுவுமே இல்லை. பசி தாங்க இயலவில்லை எனவே வீட்டிலிருந்த சிறிது பயறுகளையும், வெங்காயத்தையும் தின்றோம். வெங்காய வாடை எங்கள் வாயிலிருந்து வீசுகிறது. அதனைத் தாங்கள் கண்டறிந்து விடாதிருக்கவே எங்கள் உதடுகளை மூடியவண்ணம் பேசுகிறோம்'' என்று கூறினர்.

அதுகேட்ட கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் கண்கள் கலங்கின. அவர்கள் தம் பெண்மக்களை நோக்கி,



''என் கண்ணின் மணிகளே! நீங்கள் நல்ல உணவு உண்டு அது மூலம் உங்கள் தந்தை நரகிற்குச் செல்வதை நீங்க விரும்புகிறீர்களா?'' என்று கேட்டார்கள்.

அவர்களின் உணவு மிகவும் எளிமையானதாய் இருந்தது. அது அவர்களின் ஊழியர் அபூ உமைய்யாவிற்குக்கூட பிடிக்காத உணவாய் இருந்தது.

ஒருநாள் அபூ உமைய்யா. கலீஃபாவின் அருமைத் துணைவியார் ஃபாத்திமாவை நோக்கி, ''எப்பொழுதும் ரொட்டியும், பருப்பும் தானா? அதனை விட்டால், உண்பதற்கு வேறெதுவும் கிடையாதா?'' என்று வினவ,

அதற்கவர், ''மகனே! என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? கலீஃபாவின் உணவும் இது தானே! இதைவிட மேலானதை அவர் உண்டுவிட்டு தாழ்வானதை உனக்குக் கொடுக்கவில்லையே! இவ்வுணவைக்கூட அவர் தம் வயிறார அவர் உண்பதில்லை என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டார்.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் இத்தகைய எளிய உணவை உண்டு வந்ததால், அவர்களின் உடல் மிகவும் நலிவுற்று வந்தது. எனினும் அதனைப் பொருட்படுத்தாத அவர்கள் பகல் வேளைகளில் அரசாங்க வேலைகளில் ஈடுபட்டு, கடுமையாக உழைத்தனர். இரவு வேளையிலோ பள்ளியில் அமர்ந்து இரவெல்லாம் வணங்கிக் கொண்டிருந்தனர்.

## அறிவுள்ள மகன்

கலீஃபா உமர் இப்னு அப்துல்அஜீஸ் (ரஹ்) அவர்களுக்கு 11 ஆண் மக்களும், 2 பெண்மக்களும் பிறந்ததாக வரலாற்று நூல்களில் பொறிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பிள்ளைகள் பெரும்பாலும் தந்தையைப் போன்று நற்பண்புகளின் உறைவிடமாகவே திகழ்ந்தார்கள். எனினும் அவர்களுள் அப்துல் மலிக என்னும் மகன் முழுக்க முழுக்க பக்தியாளனாகவும், மறுமையின சிந்தனையுடையவ

ராகவும் இருந்தார். அவர் தம் தந்தைக்கு அறிவுரை கூறும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். நபி தாவூத் (அலை) அவர்களுக்கு, அவர்களின் மகனார் நபி சுலைமான் (அலை) அறிவுரை கூறியது போல ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களுக்கு உரிய நேரங்களில் அப்துல் மலிக் உபதேசம் புரிந்து வந்தார்.

கலீஃபாவாகப் பதவியேற்ற பின் தம்முடைய இல்லத்திற்குள் நுழைந்த ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) ''என்மீது பெரும் பொறுப்பு சுமத்தப் பட்டு விட்டதே!'' என்று கூறி களைப்பு மேலீட்டால் படுத்து விட்டார்கள்.

அப்பொழுது அங்குவந்த அவர்களின் அருமை மகன் அப்துல் மலிக் தம் தந்தையை நோக்கி, ''உமைய்யா கலீஃபாக்கள் பொதுமக்களிடமிருந்து பிடுங்கிக்கொண்ட பொருள்களை அவர்களிடம் மீண்டும் ஒப்படைக்காமலே படுத்துவிட்டீர்களா?'' என்று வினவ,

அதுகேட்ட அவர்கள் ''என்னருமை மகனே? நீ சொல்வது சரிதான். எனினும் லுஹர் தொழுகைக்குப் பின்னர் அப்பொருள்களை அவற்றிற் குரியவர்களிடம் ஒப்படைக்கிறேனே'' என்று கூறினார்.

உடனே அப்துல் மலிக், ''லுஹர் தொழுகையின் வேளைவரை உயிரோடிருப்பீர்கள் என்பது நிச்சயமா?'' என்று வினவ,

அதுகேட்ட அவர்கள், நெருப்பை காலில் கொட்டியது போன்று துள்ளியெழுந்தார்கள். அறிவுள்ள தம மகனை ஆரத் தழுவிய அவர்கள், ''அறிவுள்ள பிள்ளையை எனக்கீந்து என் கடமைகளைச் சரிவரச் செய்ய பேருதவி புரிந்த அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறேன்'' என்று கூறினார்கள்.

அதன்பின்னர் தம்மைக் காணக் காத்திருந்த மக்களைச் சந்தித்து, அவர்களின் குறைகளை நீக்கியதுடன்



அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்டிருந்த பொருள்களை அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

## பிள்ளைகளுக்கு நல்லுரை

கலீஃபா அவர்கள் தம் பிள்ளைகளை வளர்ப்பதில் தனி கவனம் செலுத்தினார்கள். தம் பிள்ளைகள் மார்க்க அறிஞர்களாகவும், மார்க்கப் பற்றுள்ளவர்களாகவும் நேர்மையாளர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் விளங்க வேண்டும் என்று அவர்கள் பெரிதும் விரும்பினார்கள்.

அவர்கள் தம் பிள்ளைகளுக்காக எதனையும் சேகரிக்கவோ, சேமித்து வைக்கவோ இல்லை. ''அவர்கள் நல்ல பிள்ளைகளாக இருப்பின் அவர்களுக்கு அல்லாஹ் போதுமானவன். அவர்கள் தீயவர்களாயிருப்பின் அவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை'' என்பதே அவர்களின் சித்தாந்தமாக இருந்தது.

தம் பிள்ளைகளைக் கல்வி கற்க, பாடசாலைக்கு அனுப்பி வைத்த அவர்கள் அவர்களின் நடைமுறைகளையும், ஒழுங்கு முறைகளையும் கண்காணிக்க சில ஆட்களையும் நியமித்தார்கள்.

ஒருமுறை அவர்களின் மகன் சவரம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்தார். அதன் விளைவாக அவருக்கு அஸர் தொழுகையின் ஜமாஅத்துத் தவறிவிட்டது. இச்செய்தி கலீஃபா அவர்களுக்கு உடனடியாகத் தெரிவிக்கப் பட்டது.

இச்செய்தியறிந்த கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் சினமீக்குற்று, ஆசிரியருக்கு மடல் ஒன்று எழுதினார்கள் அதில்,

''ஆசிரியர் அவர்களுக்கு: என் மகன் ஜமாஅத் தொழுகையின் மேன்மையை உணராது, அஸர் தொழுகையைத் தவறவிட்டு விட்டான் என அறிந்தேன். சவரம் செய்துக்கொண்டிருந்தமையால் கவனக் குறை

வாக ஜமாஅத் தவறிவிட்டதாக எனக்குச் செய்தி அறிவிக்கப்பட்டது. அது உண்மையாயின் அதற்கு தண்டனை அளிப்பது என்மீது கடமையாகும். எனவே நான் இத்துடன் அனுப்பியுள்ள சவுக்கால், தாங்கள் என்னுடைய பிரதிநிதியாக இருந்து இச்சவுக்கு பஞ்சு பஞ்சாகும் வரை அவனை அடியுங்கள். இனியும் இத்தகைய தவறு நடந்து விடாவண்ணம் கண்காணித்து வாருங்கள்'' என்று எழுதியிருந்தார்கள். அவ்வண்ணமே சவுக்கடி தண்டனையும் நிறைவேற்றப்பட்டது.

நூல்: தபகாத் இப்னு ஸஅது.

பார்த்தீர்களா ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் பிள்ளை வளர்ப்பு முறையை? ஜமாஅத் தொழுகை எந்த அளவிற்கு சிறப்பு வாய்ந்தது? எனவும், அலர்கள் எந்த அளவிற்குப் பேணி வாழ்ந்தார்கள் என்பதையும் இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறதன்றோ!

தம் மகனைக் கண்டித்து அவர்கள் எவ்வாறு 'வளர்த்தார்கள் என்பதனை அறிய இதோ ஓர் நிகழ்ச்சி:-

அவர்களின் மக்களுள் ஒருவர் ஆயிரம் பொற்காசுகள் மதிப்புள்ள வைர மோதிரம் ஒன்றினை வாங்கி அணிந்திருந்தார். அது அறிந்த ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தம் மகனை நோக்கி,

''என்னருமை மகனே, அம்மோதிரத்தை விற்று அப்பணத்தில் ஆயிரம் ஏழைகளுக்கு உணவளித்து விடு. இரண்டு பொற்காசுகள் மதிப்புள்ள ஒரு மோதிரம் வாங்கி அணிந்து கொள்! அதில் 'தன் நிலை உணர்ந்தவனுக்கு இறைவன் அருள்பாலிப்பானாக' என்ற வாசகத்தை எழுதி வைத்துக்கொள்!'' என்று அறிவுரை கூறினார்கள். அவரும் அவ்வாறே செய்தார்.

## இறை அச்சமும் அழுகையும்

ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக பதவியேற்ற பின்னர் தம்மீது சுமத்தப்பட்ட பெரும்



பாரத்தை எண்ணி யெண்ணி அழுது கொண்டிருப்பார்கள். தாம் அறியாமற் செய்து விட்ட சிறு சிறு குற்றங்களையும் கணக்கிட்டு அதற்காக அவர்கள் தம்மைத் தாமே சவுக்கால் அடித்துக் கொள்வார்கள். மறுமையையும், கேள்விக் கணக்கையும், இறைவனின் திருமுன் நிற்பதையும் எண்ணி அவர்கள் அழாத நாளே இல்லை எனலாம்.

'இரண்டாம் உமர்' என்று மக்களால் அன்பாக அழைக்கப் பெற்ற ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களும், தம் பாட்டனார் உமர் (ரலி) அவர்களைப் போன்றே இறையச்ச முடையவர்களாகவும், இறைவனின் கேள்விக் கணக்கை எண்ணி அழக்கூடியவர்களாகவும் இருந்தார்கள்.

ஒருநாள் அவர்களின் பணிப்பெண் கனவொன்று கண்டு அதனை அவர்களிடம் வந்து கூறினாள்.

''கலீஃபா அவர்களே! நான் கண்ட கனவில், மறுமை நாள் வந்துவிட்டது. நான் நரகத்தைக் கண்டேன். அதன் மீது சிராதுல் முஸ்தகீம் பாலம் போடப்பட்டிருந்தது. மக்கள் அப்பாலத்தின் மீது நடந்து செல்கிறார்கள். பாவிகள் அப்பாலத்தைக் கடக்க இயலாமல் நரகில் விழுந்து விடுகிறார்கள். கலீஃபா அப்துல் மலிக் இப்னு மர்வானும், அவரது மகனும், மற்றும் உலகை ஆண்ட பெரும் பெரும் மன்னரெல்லாம் அப்பாலத்தைக் கடக்க இயலாமல் நரகில் விழுந்து விடுகிறார்கள். பின்னர் தாங்கள் அழைத்துவரப் படுகிறீர்கள்!'' என்று அவள் கூறி முடிக்கு முன்னரே உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் பெருங் கூச்சலிட்டுக் கதறியழுது, மூர்ச்சித்து விட்டார்கள்.

அதுகண்ட அவள், ''கலீஃபா அவர்களே! இறைவன் மீது ஆணையாக, தாங்கள் அப்பாலத்தை நல்ல விதமாகக் கடந்து செல்ல நான் கண்டேன்'' என்று

கூறினாள். அதுகேட்ட பின்னரே அவர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்தார்கள்.

அவர்களின் இறையச்சம்பற்றி அறிஞர் யஜீத் இப்னு ஹௌஷப் அவர்கள் குறிப்பிடும் பொழுது' ''இறைவன் சுவனத்தையும், நரகத்தையும் உமர் இப்னு அப்துல் அஜீஸுக்கும், ஹஸன் பஸரீக்கும் மட்டுமே படைத்துள் ளது போன்றல்லவா இவ்விருவரும் இறைவனுக்கு அஞ்சி நடுங்கினார்கள்'' என்று கூறியுள்ளார்.

இறையச்ச மிகுதியால் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், இம்மையைப் பெரிதும் வெறுத்து, மறுமை மீது பேராவல் கொண்டார்கள். அதனாலேயே அவர்கள் தமக்கு மரணம் வரவேண்டு மென இறைஞ்சலானார்கள்.

## கலீஃபாவின் மனைவி ஃபாத்திமா

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர் களின் மனைவி ஃபாத்திமா, அவர்களின் பெரிய தந்தை கலீஃபா அப்துல் மலிக் இப்னு மர்வானின் மகளாவார். அவர் ஒரு பேரரசரின் மகளாக இருந்தும், கணவரின் மனம் கோணாமல் நடந்து, மாதர்குல மாணிக்கமாகி வரலாற்றில் உயர்ந்த இடத்தைப் பெற்றார்.

ஒரு முறை ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் மறுமையை எண்ணி அழுது கொண் டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் தம் மனைவி ஃபாத்திமாவை நோக்கி,

''ஃபாத்திமாவே! நான் இறைவனுக்கு மாறு செய்து விடுவேனோ என்ற அச்சம் இருக்கிறது. அவ்வாறு மாறு செய்யின், அவன் என்னை தண்டித்து விடுவானே!'' என்று கூறி அழுதார்கள். அது கேட்ட அவர்களின் மனைவி ஃபாத்திமாவும் அழுது விட்டார். பின்னர் அவர் இருகரங்களை ஏந்தி, ''யா அல்லாஹ்! என் கண



வரை நரக நெருப்பிலிருந்து காப்பாயாக!'' என்று துஆ இறைஞ்சினார்.

ஒரு முறை ஃபாத்திமா ஒரு அழகிய விலையுயர்ந்த முத்தைத் தம் கணவரிடம் அனுப்பி அதற்கு இணையான இன்னொரு முத்தைப் பொது நிதியிலிருந்து தேர்ந் தெடுத்து அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். அது அறிந்த ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் இரண்டு நெருப்புத் துண்டங்களை அனுப்பி வைத்தார்கள்.

அப்பொழுதவர்கள், 'இந்நெருப்புத் துண்டங்களை அணிந்து கொள்ளின் அடுத்து, நீர் கேட்ட முத்தை நான் அனுப்பி வைக்கிறேன்'' என்றும் கூறியனுப் பினார்கள்.

அரசாங்கப் பொது நிதி என்பது, பொது மக்களுக் குரியது. அதில் உள்ள ஒவ்வொரு பொருளும் அமானத்துப் பொருள்களாகும். ஆட்சியாளர்கள் அவற் றின் பாதுகாவலர்கள். அப்பொருள் ஒவ்வொன்றும் ஆட்சியாளர்களுக்கு ஹராம் ஆகும். அதனை அவர்கள் தம் சொந்த நலனிற்காக பயன்படுத்தினால், நரக நெருப்பைப் பயன் படுத்துவதற் கொப்பாகும் என்பதை இந்நிகழ்ச்சி மூலம் தம் மனைவிக்கு உணர்த்தினார்கள் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள்.

ஒருமுறை கொடி முந்திரிப்பழம் (திராட்சை) தின்பதற்கு ஆவலுற்றார்கள். எனினும் அதனை வாங்க அவர்களிடம் பணம் இல்லை. மனைவி ஃபாத்திமாவிடம் ''கொடி முந்திரிப்பழம் வாங்க ஒரு திர்ஹம் இருந்தால் கொடு!'' என்று கேட்டார்கள்.

அதற்கம்மரதரசி ''என் செய்வேன்! என்னிடம் இல்லையே!'' என்று கூறினார்.

அப்பொழுதவர்கள், ''சரி ஒரு காசாகினும் இருந் தால் கொடு!'' என்று கேட்டார்கள்.

அதற்கு ஃபாத்திமா. "ஒரு சல்லிக்காசுகூட என்னிடம் இல்லையே! தாங்கள் கலீஃபாவாக இருந்தும் கூட ஒரு காசுகூட இல்லாமலிருக்கிறீர்களே!" என்று கவலையுடன் வினவ,

"ஃபாத்திமா! இது நரகத்தின் விலங்குகளைவிட பன்மடங்கு மேலானது" என்று கூறினார்கள்.

## பேணுதலுக்கோர் இலக்கணம்

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளை அணுவளவும் பிசகாது பின்பற்றினார்கள், ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள். பேணுதலே உன் பெயர்தான் உமர் இப்னு அப்துல் அஜீஸோ என்று எண்ணும் அளவிற்கு அவர்கள் பேணுதல் மிக்க நாதாவாக விளங்கினார்கள்.

கலீஃபா ஆவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ அவர்கள் எப்பொழுதும் தீய செயல்களையோ பாவங்களையோ, அக்கிரமங்களையோ அல்லது அநீதங்களோ செய்ததே இல்லை. கலீஃபா ஆவதற்கு முன்னர் அவர்கள் ஆடம்பர வாழ்வு வாழ்ந்தனர் என்பது தவிர வேறெதனையும் கூற இயலாது.

கலீஃபா ஆனதன் பின்னர் அவர்கள் தாம் கற்ற கல்விக்கேற்ப செயலாற்றினர். அவர்களின் சொல்லும் செயலும் நன்றாகவே இருந்தன. பிறருக்கு எதனை ஏவினார்களோ அதனையே செய்தார்கள். எதனைச் செய்தார்களோ அதனையே பிறருக்கு ஏவினார்கள். நன்மையை ஏவித் தீமையைத்தடுக்கும் செயலில் அவர்கள் முனைந்து நின்றார்கள்.

மார்க்க நெறிமுறைகளை அவர்கள் எந்த அளவிற்கு பேணி நடந்தார்கள் எனில், அதற்கு ஓர் எல்லையே இல்லை எனலாம்.

அரசாங்கத்திற்குரிய பொருள்களைப் பயன் படுத்துவதில் அவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்கள். தம்முடைய சொந்த நலனுக்காக ஒரு சிறிதும் அரசாங்கப்பொருள்களை பயன் படுத்திவிடக்கூடாதே என்ற அச்சமும், கவலையும் அவர்களின் உள்ளத்தை உறுத்திக் கொண்டே இருந்தன.



இரவில் அவர்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமான விளக்கைக்கொண்டு அரசு அலுவல்களை கவனிப்பார்கள் அப்பொழுது அவர்களின் மனைவி அவர்களிடம் வந்து பேச்சுக் கொடுப்பின் உடனே அவர்கள் அரசாங்க விளக்கை அணைத்துவிட்டு, தம் சொந்த விளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு, பின்னரே உரையாடுவார்கள்.

அரசாங்கப் பொருள்களைப் பயன்படுத்துவதில் தாம் மட்டுமின்றி, அமைச்சர்களும், அதிகாரிகளும், ஒவ்வொருவரும் நாணயமாகவும், சிக்கனமாகவும் நடந்து கொள்ளவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். அதனை நடைமுறையிலும் கொண்டு வந்தார்கள்.

பேனாக்களின் முனைகளைச் சிறிதாக அமைக்குமாறும் எழுத்துக்களை நெருக்க நெருக்கமாக எழுதுமாறும், செய்திகளைச் சுருக்கமாக எழுதுமாறும் அரசாங்கத்தின் மை, தாள் ஆகியவற்றை வீண் விரயம் செய்யாதிருக்குமாறும் அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள்.

ஒரு முறை அவர்கள் உளுச் செய்வதற்காக அவர்களின் ஊழியன் அரசாங்க விறகைக் கொண்டு தண்ணீரைச் சுடவைத்தான். அது அறிந்த அவர்கள் உடனே அதற்குச் செலவான விறகின் அளவிற்கு தம் வீட்டிலிருந்து விறகைக் கொண்டுபோய் அரசாங்கச் சமையலறையில் போட்டுவிட்டு வருமாறு பணித்தார்கள்.

கஸ்தூரி என்பது மணம் வீசும் பொருளென்பது அனைவரும் அறிந்ததே! அதனைத்தொட்டால் உடனே கையில் ஒட்டிக் கொள்ளும். எனவே அது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதேயாகும். அதனை நிறுக்கும்பொழுது அது நிறுத்தவர் கையில் ஒட்டிக் கொண்டால் அது ஹராமாகாது. அவ்வாறிருந்தும் ஹஜ்ரத் உமர் கத்தாப் (ரலி) அவர்கள் கஸ்தூரியைத் தங்களின் மனைவி தொடவேண்டாமெனக் கூறினார்கள். இது அவர்களின் பேணுதலை நமக்கு உணர்த்துகிறது.

'இரண்டாம் உமர்' என்று மக்களால் அழைக்கப்பட்ட ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபாவாக இருந்த பொழுது ஒருமுறை கஸ்தூரியை நிறுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுது அவர்கள் தம் மூக்கில் ஓர் துணியைக் கட்டிக் கொண்டு அதனை நிறுத்தார்கள்.

"ஏன் மூக்கில் துணியைக் கட்டிக் கொண்டீர்கள்?" என்று அவர்களிடம் வினவப்பட்ட பொழுது,

"மூக்கினால் கஸ்தூரியை முகர்வதும், அதன் பலனை அடைவதற்கு ஒப்பாக உள்ளமையால் தான் நான் மூக்கில் துணியைக் கட்டிக்கொண்டேன்" என்றவர்கள் விடைபகர்ந்தார்கள்.

ஒருமுறை அவர்களுக்கு ஒருவர் பேரீத்தம் பழங்களை அன்பளிப்பாக அனுப்பி வைத்தார். அப்பழங்களை அரசாங்கக் குதிரைகள் சுமந்து வந்தன. அது அறிந்த அவர்கள் உடனே அப்பழங்களை விற்று அப்பணம் முழுவதையும் பொதுநிதியில் சேர்த்து விடுமாறு ஆணையிட்டார்கள். "சொந்த வேலைக்காக அரசாங்கக் குதிரைகளைப் பயன்படுத்தியதற்கு இதுவே பரிகாரம்" என்றவர்கள் கூறினார்கள்.

மற்றொருமுறை, வெளியூர் சென்றிருந்த அரசாங்க வீரர்களிடம் இரண்டு தினார் கொடுத்து தேன் வாங்கி வருமாறுச் செய்தார், கலீஃபா அவர்களின் மனைவி ஃபாத்திமா. அது அறிந்த உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் அந்தத் தேனை விற்று, அதில் வந்த பணத்தில் இரண்டு தினார்களைத் தம் மனைவியிடம் கொடுத்துவிட்டு மீதி பணத்தைப் பொது நிதியில் சேர்த்து விட்டார்கள். சொந்த வேலைகளுக்காக அரசாங்கக் குதிரைகளைப் பயன்படுத்தியதைக் கண்டித்தார்கள். இவ்வாறு கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தம் வாழ்க்கை முழுவதையும் பேணுதலுடையதாக ஆக்கிக் கொண்டார்கள்.



## ஆத்ம ஞானி

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபா மட்டுமல்லர். அவர்கள் ஓர் சிறந்த கல்விமானாகவும், மார்க்க சட்டமேதையாகவும், இமாமாகவும், தீர்ப்பு வழங்கும் காஜியாகவும், நன்மையை ஏவித் தீமையைத் தடுத்த பெரும் சீர்திருத்த வாதியாகவும், அனைத்திற்கும் மேலாக அவர்கள் ஓர் ஆத்ம ஞானியாகவும் திகழ்ந்தார்கள்.

தம்முடைய நஃப்ஸை அடக்குவதில் அவர்கள் பெரும் போரே நிகழ்த்தினார்கள்.

ஒரு முறை அரசாங்கக் கருவூலத்திற்கு ஏராளமான ஆப்பிள் பழங்கள் வந்தன. அப்பொழுது அங்குச் சென்ற அவர்களின் சிறு குழந்தை அதிலிருந்து ஒரு ஆப்பிளை எடுத்து கடித்தது. அதைப் பார்த்து விட்ட அவர்கள் சரேலெனப் பாய்ந்துச் சென்று, குழந்தையின் வாயிலிருந்த அப்பழத்தை வெடுக்கெனப் பிடுங்கி கூடையில் போட்டனர்.

ஏமாற்றமடைந்த குழந்தை அழுதுக்கொண்டே அன்னையிடம் சென்றது. அதுகண்ட ஃபாத்திமா அம்மையார் காரணம் வினவ, ஆப்பிள் பழத்தைத் தந்தை அபகரித்த செய்தியைக் கூறியது. உடனே அவ்வம்மையார், கடைத்தெருவிலிருந்து ஒரு ஆப்பிள் பழத்தை வாங்கி வரச்செய்து, அதனைக் குழந்தையிடம் கொடுத்து, அழுகையை நிறுத்தினர்.

பழங்களனைத்தையும் முஸ்லிம்களுக்குப் பங்கு வைத்துக் கொடுத்த பின்னர் இல்லம் திரும்பினர் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள்.

அப்பொழுது அவர்களின் அருமைத் துணைவியார், அவர்களை நோக்கி, "குழந்தையின் வாயிலிருந்த ஆப்பிளை ஏன் பிடுங்கினீர்கள்?" என்று வினவ,

அதற்கு அவர்கள், ஃபாத்திமாவே! நன்றாகக்கேள்! நான் அப்பழத்தை குழந்தையின் வாயிலிருந்து பிடுங்கி

னேன் என்று எண்ணிக் கொண்டாயா? இல்லவே இல்லை. என்னுள்ளத்திலிருந்து தான் அதை நான் பிடுங்கினேன். முஸ்லிம்கள் அனைவருக்கும் சேரவேண்டிய அப்பழங்களை என் குழந்தைக்குக் கொடுத்து, இறைவனின் முன்னிலையில் என் ஆத்மாவைப் பாழாக்கிக் கொள்ள நான் விரும்பவில்லை.'' என்று கூறினார்கள்.

இவ்வாறு நஃப்ஸை அடக்கி, ஆத்மாவைத் தூய்மைபடுத்தினார்கள் அவர்கள்.

மற்றொரு முறை அவர்களுக்கே ஆப்பிள்பழம் தின்ன ஆசை ஏற்பட்டது. எனினும் அதை வாங்க அவர்களிடம் காசு இல்லை. இது எவ்வாறோ அவர்களின் உறவினர்களுக்குத் தெரிந்து விட்டது. உறவினர் ஒருவர் அவர்களுக்கு ஆப்பிள் பழமொன்றை அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்.

அதனைப் பெற்றுத் தம் கையில் வைத்துக் கொண்ட அவர்கள் அப்பழத்தை ரசித்தார்கள். ''ஆகா! இந்த ஆப்பிள் எத்துணை அழகாக உள்ளது!'' என்று கூறினார்கள். அதனை முகர்ந்து பார்த்து, ''ஆ! என்ன இனிமையான மணம் வீசுகிறது' என்று கூறிய அவர்கள் அப்பழத்தை, அனுப்பியவருக்கே, திருப்பியனுப்பினார்கள்.

அப்பொழுது அவர்களின் அருகிலிருந்த அம்ர் இப்னு முஹாஜிர் என்பவர், ''அதை ஏன் திருப்பியனுப்புகிறீர்கள்? அது தங்களுக்கு அன்பளிப்பாக அனுப்பப்பட்டதல்லவா? அண்ணல் நபி (ஸல்) அவர்களே தங்களுக்கனுப்பப்பெற்ற அன்பளிப்புகளை ஏற்றுள்ளார்களே!'' என்று கூற,

அதற்கவர்கள், ''உண்மைதான். அது அவர்களுக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்பு. ஆனால் எனக்களிப்படும் அன்பளிப்பு கையூட்டு (இலஞ்சம்) அல்லவா?'' என்று கேட்டார்கள். அதுகேட்ட அவர் வாயடைத்து நின்றார்.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களோ தம் ஆத்மாவைப் பரிபக்குவப்படுத்துவதிலேயே குறியாய் இருந்தார்கள்.



சூஃபியாக்கள் எனப்படும் ஞான நாதர்கள் ஆன்மீகத்தின் உச்சநிலை இறைவனைப் பொருந்திக் கொள்வதேயாகும் என்ற ஞானக்கருத்தைக் கூறுகின்றனர்.

ஒருவனை இறைவன், எந்நிலையில் வைத்தபோதினும் எத்துணை அடி அடித்த போதினும், உலகத்துன்பங்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி சுமத்தினாலும், அதுகண்டு அவ்வடியான் வருந்தாமல், அதற்காக மகிழ்ந்து இறையருள் தன்மீது பொழிவதற்காக நன்றி செலுத்துவதே இறைவனைப் பொருந்திக் கொள்வது ஆகும். எத்தகைய நிலையிலும் இறைவன் மீது அதிருப்தி கொள்ளாதிருப்பதேயாகும். இத்தகு நிலையினை அடைவது எளிதானதன்று. அதுவே உண்மையான ஞான நிலையாகும்.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் இத்தகு உயர்நிலையை எய்தப் பெற்றார்கள்.

ஒரு நாள், அவர்களின் மகன் அப்துல் மலிக் இறந்து விட்டார். அவர் நற்பண்புகளின் உறைவிடமாய்த் திகழ்ந்தவர். இறையச்ச முள்ளவர். அவருடைய இறப்பு அவர்களுக்கு பெருத்த இழப்பு ஆகும், இத்துன்பத்தை அவர்களால் தாங்க இயலாது என்று அனைவரும் கருதினார்கள். அழுது கண்ணீர் வடிப்பார்கள் என்று எதிர் பார்த்த அனைவருக்கும் ஏமாற்றமே மிஞ்சியது. அவர்கள் எப்பொழுதும் போன்று இயல்பாகவே இருந்தனர். அழவில்லை; கலங்கவில்லை.

அப்பொழுது, ஒருவர் அவர்களை இடது கையால் குறிப்பிட்டு, ''கலீஃபாவிற்கு அல்லாஹ் பொறுமையை நல்குவானாக!'' என்று கூற, அது கண்ட அவர்கள், ''இடது கையால் குறிப்பிட்டு எதனையும் கூறாதீர்கள்.'' என்று கூறினார்கள்.

அப்பொழுது அம்மனிதர், ''அல்லாஹ் மீதாணையாகக் கூறுகிறேன். நிச்சயமாக இது எனக்கு அதிசய நிகழ்ச்சியே ஆகும். ஒரு மனிதர் இறந்துவிட்ட தம்முடைய மகனை புதைகுழியில் இறக்கி அடக்கம் செய்யும் வேளையிலும் அவருக்கு வலது கரம் எது இடது கரம்

ஏதுவென்ற சிந்தனை இருக்குமா?'' என்று கூறி வியப் புற்றார்.

இவ்வாறு, கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் இறை திருப்தியையே தம்முடைய குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள். அதனால் உலக துன்பங்கள் எதுவும் அவர்களின் உள்ளத்தை பாதிக்கவே இல்லை.

## அரசனும், ஆண்டியும் சமமே

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர் களின் செயல் முறைகள் அனைத்தையும் ஒட்டு மொத்த மாக கணக்கிட்டு அவற்றில் திருக்குர்ஆன் ஹதீஸ் ஆகிய வற்றிற்கு மாற்றமானவை ஏதேனும் உண்டா என்று நோக்கின், நிச்சயமாக இருக்காது. அவர்கள் திருக்குர் ஆனும், ஹதீஸுமாய் ஆகிவிட்டார்கள். அவர்களின் வாழ்க்கையிலோ அன்றி ஆட்சியிலோ ஷரீஅத்திற்கு மாற்றமான செயலேதும் நடந்ததில்லை என்பதை அறுதி யிட்டுக் கூறலாம்.

இஸ்லாம் சமத்துவத்தை வலியுறுத்தும் மார்க்க மாகும். எத்தனை இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இக்கொள் கையைக் கடைபிடித்துள்ளார்கள்?

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தங்கள் தோழர் களைப் பார்த்து,

''என்னைவிட உங்களில் எவரும் தாழ்ந்தவரல்லர்'' என்று கூறியுள்ளனர். இந்த ஹதீஸ் முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் சரிசமமானவர் என்ற உண்மையை நமக்குப் புலப்படுத்த வில்லையா?

பிச்சையெடுக்கப் புறப்பட்ட ஓர் இளைஞரை உழைக் குமாறு அறிவுறுத்தித் தம் திருக்கரங்களாலேயே அம் மனிதரின் கோடரிக்கு முளையடித்துக் கொடுத்தனர், நபி (ஸல்) அவர்கள். இச்சம்பவம் முஸ்லிம்களிடையே உயர்ந்தவன் தாழ்ந்தவன் இல்லை; அனைவரும் சமமே என்ற கருத்தை நமக்கு அறிவிக்க வில்லையா?



குலஃபாயே ராஷிதீன்களுக்குப்பின் வந்த கலீஃபாக் களில் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர் களைத் தவிர்த்து வேறெவரும் முஸ்லிம்களிடையே சரிசம மாக நடந்து, மக்களுக்கு முன்மாதிரியாகத் திகழவில்லை.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர் கள் தங்களின் ஊழியர்களைத் தங்களுக்கு சமமாக நடத் தியதைப் பாருங்கள்!

ஒருநாள் அவர்களின் பணிப்பெண் விசிறி கொண்டு விசிற அவர்கள் உறங்கலானார்கள். சிறிது நேரத்தில் அவளுக்கே உறக்கம் மேலிட விசிறியைப் போட்டு விட்டு அவள் உறக்கத்தில் ஆழ்ந்தாள். திடீரெனக் கண் விழித்த கலீஃபா அவர்கள், களைப்பு மிகுதியால் உறங்கி விட்ட பணிப்பெண்ணைக் கண்டு அவள் மீது இரக்கம் கொண்டார்கள்.

'நான் உறங்கிய பொழுது அவள் எனக்கு விசிறி னாள். இப்பொழுது அவள் உறங்குகிறாள். அவளுக்கு நான் ஏன் விசிறக் கூடாது? அவளை விட நான் உயர்ந் தவனோ, என்னைக்காட்டினும் அவள் தாழ்ந்தவளோ அல்லவே, என்றெண்ணி அவளுக்கு விசிறத் துவங் கினார்கள்.

அரபு நாடு, எகிப்து, ஈரான், அந்தலுஸ் (ஸ்பெயின்) ஆகிய நாடுகளுக்கெல்லாம் அதிபதியான ஓர் கலீஃபா தம்முடைய அடிமைப் பெண்ணுக்கு விசிறி விட்ட நிகழ்ச்சி போன்று வரலாற்றில் வேறெந்த மாமன்னரின் வாழ்க்கையிலேனும் காண இயலுமா?

திடீரெனக் கண்விழித்த, அவர்களின் பணிப்பெண் கலீஃபா தனக்கு விசிறுவதைக் கண்டு நடுங்கினாள்.

ஆனால் அவர்களோ, நிதானமாக, ''பெண்ணே! நீ எனக்கு விசிறினாய், நான் உனக்கு விசிறுகிறேன். நாம் இருவரும் மனிதர்கள் தாமே! வெப்பம் உன்னுடலையும் தாக்கத் தானே செய்யும். நான் உன்னைவிட உயர்ந்த வனல்லவே!'' என்று கூறினார்கள்.

அவர்கள் கலீஃபா ஆனவுடன் மக்கள், அவர்களுக்கு மரியாதை செய்யும் முகமாக எழுந்து நின்றார்கள். அப்பொழுது அவர்கள் எழுந்து நின்று கொண்டார்கள். அவர்கள் மக்களை நோக்கி, ''என்னரும் மக்களே! நீங்கள் அனைவரும் அமருங்கள். அப்பொழுதுதான் நானும் அமருவேன். நீங்கள் நின்றிருக்கும் பொழுதே நான் அமரமாட்டேன். இறைவன் முன் மட்டுமே நிற்க வேண்டும்'' என்று கூறி அனைவரையும் அமரச் செய்து பின்னர், அவர்கள் அமர்ந்தார்கள். தாம் கலீஃபா என்பதற்காகத் தமக்குக் கொடுக்கப்படும் மரியாதைகளையெல்லாம் அவர்கள் தடைசெய்தார்கள்.

ஒரு நாள் இரவு ஓர் விருந்தினர் அவர்களின் இல்லத்திற்கு வந்திருந்தார். அவரை உபசரித்துக் கொண்டிருந்தவேளையில் விளக்கு அணைந்து விட்டது. ஊழியனோ உறங்கிக் கொண்டிருந்தான். அவனை எழுப்ப விரும்பவில்லை. வந்த விருந்தாளி தாமே சென்று விளக்கை எரிய வைக்க முயன்றார். எனினும் கலீஃபாவே எழுந்து சென்று அதனைச் சரிசெய்து எரிய வைத்தார்கள்.

அது கண்டு வியப்புற்ற அவர், ''என்ன, தாங்கள் தாமா அவ்வேலையைச் செய்ய வேண்டும்'' என்று வினவ,

அதற்கவர்கள், ''அதனால் யாதொருகுற்றமுமில்லை. நான் விளக்கெரிக்க எண்ணெய் கொண்டு வரச் சென்ற பொழுதும் உமர்தான். திரும்பி வந்த பொழுதும் உமர்தான். ஏதும் குறைந்து விட்டேனா?'' என்று வினவினார்கள். அது கேட்ட விருந்தாளி 'இவர் கலீஃபாவா? ஊழியரா?'' என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்.

அந்த அளவிற்கு ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் 'மனிதர்களை மனிதர்களாய்க் கருதி கடைமட்ட ஊழியர்களையும் தமக்குச் சமமானவர்கள் என்றே கருதினார்கள், சொல்லப்புகின் செல்வந்தர்களையும், செல்வத்தையும் வெறுத்து, ஏழ்மையையும், ஏழைகளையும் அவர்கள் அரவணைத்துக் கொண்டனர்.



மதீனாவின் ஆளுநராக இருந்தபொழுது, அவர்கள் பெரும் செல்வந்தராகவும், ஆடம்பரம் மிக்கவராகவும் திகழ்ந்தது உண்மையே. எனினும் கலீஃபா ஆனதன் பின்னர், தம்முள்ளத்திலிருந்த பெருமையை அகற்றுவதற்கு படாதபாடு பட்ட அவர்கள் அதில் வெற்றியும் பெற்றார்கள். அது இறைவன் அவர்கள்மீது பொழிந்த தனிப்பெருங் கருணை என்றுதான் சொல்லவேண்டும். அதனாலேயே பணிவின் பிறப்பிடமாகவும், அடக்கத்தின் உறைவிடமாகவும் அவர்கள் திகழ்ந்தார்கள்.

## வாழ்வின் இறுதி

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் இம்மையை வெறுத்து மறுமையின்மீது பேராவல் கொண்டார்கள். மறுமையின் மேலான வாழ்க்கையை முழுக்க முழுக்க உணர்ந்திருந்த அவர்கள், அதனைப் பெறுவதையே தம் தலையாய குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள்.

''மூஃமின்களுக்கு (இறை நம்பிக்கையாளர்களுக்கு) இவ்வுலகம் சிறைச்சாலையாகும்'' என்ற அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நன்மொழிக்கொப்ப உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் வாழ்வு அமைந்திருந்தது.

சிறையில் ஒரு கைதி எவ்வாறு துன்பத்தைச் சுமந்து கொண்டு, வசதியற்ற நிலையில் வாடிவதங்கிக் கொண்டிருப்பானோ, அதே போன்ற வாழ்க்கையை ஹஜ்ரத் உமர் அவர்கள் தமக்காக உருவாக்கிக் கொண்டார்கள்.

இம்மையில் இன்பம் காண்பவர்களுக்கு மறுமையில் இன்பமில்லை! இம்மையில் இன்பங்களை வெறுத்து ஒதுக்கியவருக்கு மறுமையில் சுவனப் பெருவாழ்வுகிட்டும். இவ்வுண்மையை முற்றிலும் உணர்ந்த அவர்கள், சுவனப் பெருவாழ்வைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட அவர்கள், இம்மையின் சிறு இன்பத்தைக்கூட வெறுத்தார்கள்.

எனவே, அவர்கள் தமக்கு மரணம் விரைவில் வர வேண்டுமென துஆ இறைஞ்சலானார்கள்.

அப்பொழுது ஒருவர் அவர்களை நோக்கி, ''அல்லாஹ் தங்கள் மூலம் ஏராளமான நன்மைகளைச்செய்துள்ளான். அவ்வாறிருக்க, தாங்களோ தங்களுக்கு மரணம் வரவேண்டுமென்று இறைஞ்சலாமா?'' என்று வினவ,

அதற்கவர்கள், ''நான் நபியூசுஃப் (அலை) அவர்களைப் போன்று ஆகக்கூடாதா? அவர்கள் ''ரப்பி தவஃப்பனீ முஸ்லிமன் வ அல்ஹிக்னீ பிஸ்ஸாலிஹீன்'' (இறைவா) என்னை முஸ்லிமாக இறக்கச்செய்து சான்றோர்களின் கூட்டத்தில் சேர்த்து வைப்பாயாக! என்று இறைஞ்சவில்லையா?'' என்று கேட்டார்கள்.

அவர்களின் துணைவி ஃபாத்திமா அம்மையார் கூறுகிறார்:-

''என்னுடைய கணவரைக் காட்டினும் 'உளூ'விலும் தொழுகையிலும் ஈடுபாடுடையவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் அவரைக்காட்டினும் அல்லாஹ்வை அஞ்சக்கூடியவர் வேறெவரையும் நான் கண்டதில்லை. இஷாத் தொழுத பின்னர் அதே முஸல்லாவில் அப்படியே உட்கார்ந்து விடுவார்கள். துஆச் செய்யக் கைகளை உயர்த்தியவுடன் அழத்துவங்கி விடுவார்கள். அவ்வாறு அழுதழுதே, சோர்வுற்று கண்ணயர்ந்தும் விடுவார்கள். பின்னர் கண் விழித்ததும் மீண்டும் அழுதழுது துஆச் செய்வார்கள். இவ்வாறே இரவெல்லாம் கழியும். அவர்கள் கலீஃபா ஆனபின்னர் உடலுறவுக் குளிப்பு (ஜனாபத்) குளிக்கவேண்டிய நிலை எங்களுக்கு ஏற்பட்டதேயில்லை.''

இவ்வாறு கூறிய அம்மாதரசி, தம் கணவரின் மனம் நோகாமல் எல்லா வகைகளிலும் நடந்து கொண்டார். அதுமட்டுமன்றி, கணவரின் செயல்களில் எவ்விதக் குறுக்கீடோ, முறையீடோ, தர்க்கமோ, விவாதமோ,



வீண் வார்த்தையாடலோ செய்யாமல் அமைதிகாத்த ஆரணங்காகத் திகழ்ந்தார்கள் (அல்லாஹ், அவர்களின் மறுமைப்பேற்றை செழிப்பாக்கி வைப்பானாக! ஆமீன்)!

இறையச்ச வாழ்வு வாழ்ந்து, இனிய ஆட்சிபுரிந்த கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களுக்கு இறுதி நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

முஸ்லிம்களும், முஸ்லிமல்லாதவர்களும், அவர்களின் ஆட்சியை போற்றிப்புகழ்ந்தார்கள். வாழ்த்தி வரவேற்றார்கள். ஆனால் கலீஃபா அவர்களின் உறவினரான உமையாக்களோ, அவர்களை உள்ளும், புறமும் வெறுப்புக் கண்கொண்டு நோக்கினார்கள். அதற்குக் காரணம் அவர்கள் அரசனாயினும் ஆண்டியாயினும் நீதி வழுவாது, நேர்வழியில் நின்றதேயாகும்.

மேலும் உமைய்யா கலீஃபாக்கள், குலஃபாயே ராஷிதீன்கள் போலன்றி, அரசர்களைப்போன்று ஏக போக ஆடம்பரத்தில் திளைத்தவர்கள். சில கலீஃபாக்கள் மது, இசை, மங்கை என்றுகூட அக்கிரமங்களில் ஈடுபட்டிருந்தனர். எனவே, அவர்களின் வாரிசுகளிடமும், உறவினர்களிடமும் அத்திய பழக்கவழக்கங்கள் ஊடுருவி விட்டன. ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், தாம் பதவியேற்ற பின்னர் ஆட்சியாளர்களிடமும், அவர்களின் உறவினர்களிடமும், மக்களிடமும் மண்டிக்கிடந்த தீமைகளை அகற்ற முனைந்து நின்றார்கள். எத்தகைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, அவர்கள் இறைவன் தம்மீது சுமத்திய கடமையைச் செவ்வனே நிறைவேற்றுவதில் தீவிர கவனம் செலுத்தினார்கள். அது உமைய்யாக்களுக்கு பாதிப்பாகத் தென்பட்டது.

பாலும், தெளிதேனும், சர்க்கரைப்பாகும்குழைத்து பளிங்குக் கிண்ணத்திலிட்டு பசியாறிய பணக்காரனுக்கு, பஞ்சைகள் அருந்தும் கஞ்சியைக் கொடுப்பின் அவன் இஞ்சிதின்ற குரங்குபோலல்லவா காட்சிதருவான்? அந்நிலை தான் உமைய்யாக்களுக்கு ஏற்பட்டது.

''கலீஃபா என்பவர் 'அமீருல் முஃமினீன்' ஆவார். அதாவது இறை நம்பிக்கையாளர்களின் தலைவர் ஆவார்,

அவர், தாம் முதலில் திருக்குர்ஆன், ஹதீஸின் வழி நின்று, முன் மாதிரியாகி மக்களையும் தம் பாதையிலேயே அழைத்துச் செல்ல வேண்டும். இது அல்லாஹ் அவர்மீது சுமத்திய பொறுப்பு''

இது ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் கொள்கை.

இதனை உமைய்யாக்கள் வெறுத்தார்கள்; எதிர்த்தார்கள்; கலீஃபாவிற்கு எதிராக அவர்கள் செயல்படலானார்கள். கலீஃபாவை எதிர்த்து கலகமும், குழப்பமும் விளைவிக்க அவர்கள் விரும்பினார்கள். எனினும் மக்கள், அவர்களை ஆதரிக்க வில்லை. மக்களின் ஆதரவு முழுவதும் கலீஃபாவின் பக்கமே இருந்தது.

ஒரு நாள் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் முன்னால் பல அடிமைப்பெண்கள் கொண்டு வரப்பட்டார்கள். அப்பொழுது கலீஃபாவுடன், காலஞ் சென்ற கலீஃபா வலீத் உடைய மகன் அப்பாஸ் இருந்தார். அவர் ஹஜ்ரத்உமர்இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களிடம், அழகிய ஓர், அடிமைப் பெண்ணைச சுட்டிக்காட்டி,

''கலீஃபா அவர்களே! இவ்வழகிய அடிமைப் பெண்ணை ஏன் தாங்கள் வைத்துக்கொள்ளக் கூடாது!'' என்றார்.

அதுகேட்ட அவர்கள், ''என்ன நீர், என்னை ஜினா (விபச்சாரம்) செய்யுமாறு ஏவுகிறீரா?'' என்று கண்டித்தார்கள்.

அதுகேட்டு ஆத்திர முற்ற அவர் உடனே தம்முடைய உறவினர்களிடம் சென்று, ''கலீஃபா உங்களுடைய முன்னோர்களையெல்லாம் விபச்சாரகர்கள் என்று கூறுகிறார். அவருடைய வீட்டிலா தங்கியுள்ளீர்கள்?'' என்று திரித்துக் கூறினர். இதுவும் உமைய்யாக்களிடையே, ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களைப் பற்றி தவறான கருத்துக்களைப் பரப்ப ஓர் வாய்ப்பாக அமைந்தது.



இறுதியில் அவர்களின் உறவினர்களான உமைய்யாக்களே, ஹஜ்ரத் அவர்களின் உணவில் நஞ்சைக் கலந்து கொடுத்துவிட்டார்கள். இது ஹிஜ்ரி 101 ரஜப் மாதம் பிறை 20 இல் நடந்தது.

## இறைநேசச்செல்வரின் மரணம்

அவர்களின் அடிமை ஒருவனுக்கு ஆயிரம் பொற்காசுகள் கொடுத்து, அவர்களின் உணவில் நஞ்சைக் கலந்து விடச்செய்தார்கள், உமைய்யாக்கள்.

நஞ்சு வேலை செய்யத்துவங்கியது. அதனால் உடல் நிலை வெகுவாக பாதிக்கப்பட்டது. அப்பொழுது மருத்துவர் வந்து அவர்களின் உடலை நன்றாகப் பரிசோதித்தார்.

பின்னர் அவர் அவர்களை நோக்கி, ''அமீருல் முஃமினீன் அவர்களே! தங்களுக்கு நஞ்சு கொடுக்கப் பட்டுள்ளது. எனவே தாங்கள் நீண்ட நாட்கள் உயிர் வாழ்வீர்களென்று என்னால் நம்பிக்கையாகக் கூற இயலாது'' என்று கூறினார்.

அதுகேட்ட ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், ''நீர் கூறுவது முற்றிலும் உண்மையே! எனினும் நஞ்சு ஊட்டப்படாதவர்கள் வாழ்வதும் நம்பிக்கையற்ற நிலைதானே'' என்று கூறினார்கள்.

''தங்களுக்கு நஞ்சூட்டப்பட்ட செய்தியினைத் தாங்கள் அறிவீர்களா?'' என்று மருத்துவர் வினவ,

''நஞ்சு என் வயிற்றுக்குள் செல்லும் பொழுதே அதை நான் உணர்ந்து கொண்டேன்'' என்று அவர்கள் விடையளித்தார்கள்.

அதுகேட்ட மருத்துவர், ''உடனே ஏதேனும் மருத்துவம் செய்து கொள்ளுங்கள். இன்றேல் உயிருக்கு ஆபத்து நேரிடும்!'' என்று கூறினர்.

அதற்கவர்கள், எவ்விதப்பரபரப்பும் அச்சமுமின்றி நிதானமாக, ''என்னுயிர் எங்கே போகும்? என்னைப் படைத்தவனிடம் தானே! அவனிடம் போகிறவர்கள் தாம் அனைவரினும் மேலானவர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாகக் கூறுகிறேன். நஞ்சை முறிக்கும் மருந்து என் காதருகில் வைக்கப்பட்டிருப்பினும் சரி, அதனை எடுக்க என் கரங்களை நான் நீட்டமாட்டேன்.'' என்று கூறினர்கள்.

பின்னர்,

''யா அல்லாஹ்! உமரைச் சந்திக்க நீ விரும்புவாயாக!'' என்று இறைஞ்சினர்கள்.

பிறகு தமக்கு நஞ்சூட்டிய அடிமையை தம்மருகே அழைத்த அவர்கள்,

''எதற்காக எனக்கு நீ நஞ்சூட்டினாய்?'' என்று வினவியக்கால்,

''எனக்கு ஆயிரம் பொற்காசுகள் கொடுத்தார்கள். அது மட்டுமல்ல எனக்கு அடிமைத்தளையிலிருந்து உரிமை விடுவதாகவும் வாக்களித்தார்கள். அதனை நம்பியே நான் தங்களுக்கு நஞ்சூட்டினேன்'' என்று கூறினான் அவ்வடிமை.

அதுகேட்ட அவர்கள், அவனைமன்னித்ததோடன்றி, அவன் கையூட்டாகப் பெற்ற பொற்காசுகள் ஆயிரத்தையும் பெற்று, பொது நிதியில் சேர்த்து விட்டார்கள். பின்னர் அவர்கள் அவனை நோக்கி,



அல்லாஹ்வுக்காக நான் உன்னை மன்னித்தேன். அடிமைத்தளையினின்று உரிமையும் வழங்கினேன். நல்ல விதமே நீ விரும்பிய இடத்திற்குச் செல்வாயாக!'' என்று கூறினர். விடுதலை பெற்ற அவன் தான் இழைத்த குற்றத்தையும், ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் பெருந்தன்மையையும் எண்ணி வேதனைப்பட்டான்.

ஹஜ்ரத் உமர் அவர்கள், தம் மரணத்தின் வரவை எதிர்நோக்கி ஆவலாயிருந்தார்கள். தாம் இறந்த பின் அடக்கம் செய்யப்படுவதற்காக ஓரிடத்தை விலைக்கு வாங்க எண்ணினர்கள். அவ்விடம் ஓர் கிறித்துவருக்கு சொந்தமாயிருந்தது. நிலத்திற்கு உரிய கிரயத்தைக் கொடுத்து அதனை அவரிடமிருந்து அவர்கள் வாங்கினர்கள்.

நாளுக்கு நாள் உடல் நிலை மோசமாகிக் கொண்டே வந்தது. அவர்களைக் கண்டு உடல் நிலையை விசாரிக்க நாள்தோறும் ஏராளமானோர் வந்து சென்ற வண்ணமிருந்தனர்.

அப்பொழுது கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் அணிந்திருந்த ஆடையோ, கிழிந்து, அழுக்கடைந்து காணப்பட்டது. அதுகண்டு அவர்களின் உறவினர்கள் அருவருப்படைந்தார்கள்.

அவர்களின் மைத்துனர் தம் சகோதரியை நோக்கி, ''கலீஃபாவுக்கு வேறு புதிய ஆடையை அணிவிக்கக் கூடாதா?'' என்று வினவ,

அதற்கவர்களின் மனைவி ஃபாத்திமா, ''கலீஃபாவிடம் அந்தச் சட்டையைத் தவிர்த்து வேறு சட்டை எதுவும் இல்லையே!'' என்று கூறினர்கள். மாபெரும்

அரசாங்கத்தின் அதிபதி, உமைய்யாக் கிலாஃபத்தின் கலீஃபா, இறை நம்பிக்கையாளர்களின் தலைவர், ஆகிய அவர்களிடம் இருந்ததோ கிழிந்த, அழுக்கடைந்த ஒரேயொரு சட்டை. உலக அதிசயம் என்று கூறுகிறார்களே இதைவிட உலக அதிசயம் வேறென்ன உள்ளது?

அவர்களின் சிறியதந்தையின் மகன் மஸ்லமா என்பவர், கலீஃபா அவர்கள் மீது அன்புடையவராயிருந்தார். அவர் மரணத்தருவாயில் அவர்களை அணுகி, ''கலீஃபா அவர்களே! தாங்கள் தங்கள் மக்களுடைய விஷயத்தில் உலகில் வேறெவரும் நடந்து கொள்ளாத முறையில் நடந்து கொண்டிருக்கிறீர்கள். தங்களுக்குப் பதிமூன்று மக்கள் இருந்தும் அவர்களுக்காக எவ்விதப் பணம் காசும் தாங்கள் விட்டுச்செல்லவில்லையே!'' என்றார்.

அதுகேட்ட உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள்,

''என்னைச் சிறிதளவு தூக்கி அமரச்செய்யுங்களேன்'' என்று கூறினார்கள். பின்னர் அவர்கள் தம் உறவினர்களையும், மனைவி மக்களையும், அனைவரையும் நோக்கி,

''நான் என் மக்களின் உரிமை எதனையும் பறித்துக் கொள்ளவுமில்லை. மற்றவர்களின் உரிமையைப் பறித்து அவர்களுக்கு நான் கொடுக்கவுமில்லை. எனவே அவர்கள் நன்மக்களாயிருப்பின், அவர்களின் செயல்களைப்பொறுப் பேற்றுக் கொள்ள அல்லாஹ்வே போதுமானவன். அன்றி அவர்கள் தீயவர்களாயிருப்பின் அது பற்றி எனக்கு எவ்விதக் கவலையுமில்லை'' என்று கூறி ''இன்ன வலியுல்லாஹல்லதீ நஸ்ஸலல்கிதாப வஹுவ யதவல்லஸ் ஸாலிஹீன்'' என்னும் திருமறை ஆயத்தை ஓதினார்கள்.

பின்னர் அவர்கள் தம்முடைய பிள்ளைகள் அனைவரையும் தம் மருகில் அழைத்து,



''என்னரும் மக்களே! உங்களனைவரையும் செல்வந்தர்களாக ஆக்கிவிட்டு நான் நரகத்திற்குச் செல்வதைக் காட்டினும், உங்களை ஏழ்மையில் விட்டு விட்டு சுவனத்திற்குச் செல்வதையே நான் விரும்புகிறேன். அல்லாஹ்வே உங்களின் எசமானன் ஆவான். நீங்கள் நல்லவிதமே செல்லுங்கள்'' என்று கூறினர்.

அதன் பின்னர் அவர்கள் தம்மருகே எவரையும் இருக்கவேண்டாமென அப்புறப்படுத்தினர். அனைவரும் சென்றபின்னர், தம்முடைய முழுகவனத்தையும் இறைவன் பால் செலுத்தினர்.

அவர்களின் மனைவி ஃபாத்திமாவும், சிறிய தந்தையின் மகன் மஸ்லமாவும் வெளியில் கவலை தோய்ந்த முகத்துடன் அமர்ந்திருந்தனர். அப்பொழுது உள்ளிருந்து ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் மரணத்தருவாயிலும், தனிமையில் நிதானமாகப் பேசுவது தெளிவாகக் கேட்டது.

அவர்கள் கூறினார்கள், ''யா அல்லாஹ், என்னை ஏராளமான செயல்களைச் செய்யுமாறு நீ எனக்குக் கட்டளையிட்டாய். அவற்றை நிறைவேற்றாத பாவியாக நான் ஆகிவிட்டேன். பலவற்றைச் செய்யக்கூடாதென நீ தடுத்திருந்தாய். அவற்றை நான் செய்துவிட்டேன்.'' என்று திரும்பத் திரும்ப மும்முறை அதனையே கூறிக் கொண்டிருந்தார்கள்.

பின்னர், ''லாஇலாஹ இல்லல்லாஹு'' என்று கூறிவிட்டு, ஒரு திக்கை நோக்கிக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள், அப்பொழுது அவர்களின் வாயிலிருந்து, ''ஏதோ பசுமையான, அழகான முகங்கள் தெரிகின்றன. அவை மனிதர்களோ, ஜின்களோ அல்ல'' என்று கூறினார்கள்.

பின்னர், 'தில்கத் தாருல் ஆகிறத்து, நஜ் அலுஹாலில்லதீன லாயுரீதூன ஃகுலுவ்வன் ஃபில் அர்ளி வலா ஃபஸாதன், வல் ஆகிபது லில் முத்த கீன்'' (''பூமியில் எவர் பெருமையை விரும்ப வில்லையோ அக்கிரமம் புரியவில்லையோ அவருக்கே நாம் மறுமையின் வீட்டை அமைத்திருக்கிறோம். நிச்சயமாக மறுமை தூய்மையாளர்களுக்கே உரியது'') என்னும் ஆயத்தை ஓதினார்கள்.

இவ்வாறு அவர்கள் ஓதுவதை வீட்டுவாயிலில் இருந்த அவர்களின் துணைவியார் ஃபாத்திமா அம்மை யாரும் மஸ்லமாவும் கேட்டுக் கொண்டிருந்தனர். எனி னும் இவ்வாயத்தை ஓதியபின்னர் எவ்வித ஓசையும் உள்ளிருந்து வரவில்லை.

அதுகண்டு திடுக்குற்ற மஸ்லமா ஃபாத்திமாவை நோக்கி ''கலீஃபா அவர்கள் இறந்துவிட்டார்கள்'' என்று கூறினார்.

அது கேட்டுத் துள்ளியெழுந்த அம்மாதரசி, சரே லெனப் பாய்ந்து, மின்னல் வேகத்தில் வீட்டினுள் நுழைந்து பார்த்த பொழுது, அங்கே ஹஸ்ரத் உமர் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் வெற்றுடல்இருந்தது.

'இன்னாலில்லாஹிவ இன்னா இலைஹி ராஜிவூன்'

அவர்களின் மரணம் ஹிஜ்ரி 101(கி. பி. 720) ரஜப் 25ம் நாளில் நிகழ்ந்தது. அப்பொழுது அவர்களுக்கு வயது 39. நஞ்சூட்டப்பெற்ற பின் இருபதாம் நாளன்று அவர்கள் இறப்பெய்தினார்கள்.

இறப்பதற்குமுன், ஓர் கிறித்தவரிடமிருந்து ஹிம்ஸ் அருகிலுள்ள தைர்ஸிமான் என்னும் இடத்தில் தம்மை அடக்குவதற்காக கலீஃபா வாங்கிய நிலத்திலேயே அவர் கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.



அவர்கள் கிலாஃபத்திலிருந்து, நல்லாட்சி புரிந்த காலம் இரண்டு ஆண்டுகள், ஐந்து மாதங்கள் நான்கு நாட்களாகும்.

## உலக மக்களின் வேதனை

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர் களின் இறப்பு முஸ்லிம்களுக்கு அன்று ஈடுசெய்ய முடி யாத இழப்பாகும். ஏனெனில் அவர்களின் ஆட்சியில் முஸ்லிம்களும், அரபு நாடுகளும் அடைந்த நன்மைகள் ஏராளம் ஏராளம்.

''கலீஃபா வலீதுடைய காலத்தில் மக்கள் கட்டிடங் களைப் பற்றியும், கட்டிடக்கலைகளைப் பற்றியும் பேசிக் கொண்டனர். கலீஃபா சுலைமானுடைய காலத்தில் மக்கள் பெண்களைப் பற்றியும் வகை வகையான உணவு களைப் பற்றியும் பேசிக் கொண்டனர். ஆனால் கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் காலத் தில் மக்கள் தொழுகையைப் பற்றியும், மார்க்கத்தைப் பற்றியும் பேசலாயினர்'' என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

பஸ்ராவின் ஆளுநர் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் இறந்தபொழுது ''அவர் ஒழிந்தது போன்று, அவரது முன்மாதிரியும் இல்லாது ஒழியட்டும்!'' என்று இறை வனிடம் துஆ இறைஞ்சிய ஆத்ம ஞானி ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள், ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் இறப்புச் செய்தியினைக் கேட்டு, மனம் கலங்கி நின்றார்கள்.

''இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்'' என்று கூறிய அவர்கள், ''நன்மைகளனைத்திற்கும் உரிமையானவரே! தாங்கள் இறந்து விட்டீர்களா!?' என்று கூறி வேதனைப்பட்டார்கள்.

அவர்களின் இறப்புச் செய்தியறிந்த கிறித்துவ மத குரு, கண்ணீர் விட்டு அழலானுர். விக்கி, விக்கி அழுது கொண்டேயிருந்தார்.

அப்பொழுது மக்கள் அவரைநோக்கி ''கலீஃபாவோ மூஸ்லிம்' அவ்வாறிருக்க நீங்கள் எதற்காக அழுகிறீர்கள்'' என்று வினவ,

அதற்கவர், ''நான் கலீஃபாவின் மரணத்தை எண்ணியா அழுகிறேன்? இல்லை இம்மாநிலத்திலிருந்து மறைந்துவிட்ட ஓர் ஒளியை எண்ணி அழுகிறேன்'' என்று கூறினுர்.

கிறித்துவரான ரோமப் பேரரசருக்கு கலீஃபா இறந்த செய்தி கூறப்பட்ட பொழுது, அவர் அழுது கண்ணீர் விட்டார்.

''ஏன் அழுகிறீர்?'' என்று ஒருவர் கேட்டபொழுது ''நற்பண்புகளின் உறைவிடம் இன்று இவ்வுலகை விட்டு நீங்கிவிட்டதே!'' என்று கூறி அழுதார்.

பின்னர் அவர் கூறினுர், ''வீட்டிற்குள் முடங்கிக் கிடந்து இறைவனை வணங்கும் ஓர் துறவியைப் பற்றி நான் வியப்புறவில்லை; ஆனுல் உலகச் செல்வங்களைத் தும், தமது காலடியில் கிடந்தும் அவற்றை ஏறிட்டும் பாராது, ஏழையாய் வாழ்ந்தவரை எண்ணியே நான் வேதனைப்படுகிறேன்'' என்று கூறினுர் அவர்.

இவ்வாறு அரபு நாடுகள் மட்டுமன்றி, உலக நாடுகளைத்தும், முஸ்லிம்கள் மட்டுமன்றி, மாற்று மதத்தவர்களும் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் இறப்புப்பற்றி நீண்டகாலம் கவலையுடன் பேசிவந்தார்கள். கலீஃபா அவர்களின் நேர்மையும், எளிமையும் உலகமக்களுள் பெரும்பாலோரை திசை திருப்பி, நன்மையின் பால் செலுத்தின என்று கூறலாம்.



## முஜத்தித்

கலீஃபா உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் இஸ்லாத்தில் தோன்றிய முதல் முஜத்தித் என்று அழைக்கப்படுகிருர்கள்.

'முஜத்தித்' எனில் 'புத்துயிரளிப்பவர்' என்று பொருளாகும்.

'முஜத்தித்' என்பதற்கு விளக்கம் கூறுமாறு ஹஜ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் (ரஹ்) அவர்களிடம் வினவப்பட்டபொழுது,

''குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றின் உட்பொருளை சரியான முறையில் உணர்ந்து அதன்மூலம் ஹராம் (விலக்கப்பட்டது), மக்ரூஹ் (தவிர்க்கப்பட்டது), முஸ்தஹப் (விரும்பத்தக்கது), முபாஹ் (அனுமதிக்கப்பட்டது) ஆகியவற்றிற்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நன்கு விளங்கி, மார்க்கத்தில் புகுத்தப்பெற்ற கடப்பான (இஸ்ராஃபான) செயல்களை அகற்றி, ஷரீஅத்தைத் தூய்மைப்படுத்தும் மார்க்க மேதை என்பது பொருளாகும்.'' என்று கூறினுர்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நூற்ருண்டின் துவக்கத்திலும், தீனுக்குப்புத்துயிரளிக்க ஒருவரை என்னுடைய தீனிலிருந்து எழுப்புவான்'' என்று கருத்துப்பட கூறியுள்ளார்கள்.

நூல் : அபூதாவூத்

இந்நபிமொழியை ஆதாரமாகக் கொண்டு மக்கள் ஒவ்வொரு நூற்ருண்டிலும் தலை சிறந்த மார்க்கமேதையொருவரை முஜத்தித் என்று அழைக்கின்றனர். அதற்கொப்ப வரலாற்ருசிரியர்கள் ஹஜ்ரத் உமர் இப்னு

அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களை இஸ்லாத்தில் தோன்றிய முதல் முஜத்திதீ என்று கணித்துள்ளனர்.

உமைய்யாக்களின் ஆட்சி ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்களிடமிருந்து துவங்கியது. ஹிஜ்ரீ 41 (கி. பி. 661)இல் துவங்கிய உமைய்யா கிலாஃபத் முற்றிலும் நபிவழிக்கு மாற்றமான எதேச்சதிகார முடியரசாக விளங்கியது.

விசுவாசப் பிரமாணம் (பைஅத்) என்னும் வகையில் நேர்வழி நடந்த நான்கு கலீஃபாக்களுக்கு மாறுபட்டு வாரிசுரிமை என்ற முறையை இஸ்லாமிய ஆட்சியில் புதிதாகத் தோற்றுவித்தது. இஸ்லாமிய ஆட்சியில் வாரிசுரிமை என்பது கிடையாது. பொதுமக்கள் விரும்பி எவரைத் தேர்ந்தெடுப்பாரோ, எவருக்கு விசுவாசப் பிரமாணம் செய்வார்களோ அவர்களே இறைமறை—நபிவழிப்படி ஆளத்தகுதி பெற்றவர்கள் இவ்வழிமுறையினைக் கைவிட்டு மன்னராட்சி முறையினைக் கொண்டு வந்தவர்கள் ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள்.

"தம் மகன் எஜீத் தமக்குப் பின் அரியணையேற வேண்டும் என்று முஆவியா (ரலி) அவர்கள் ஆசைப்பட்டது தவறாகும். அவர்களின் ஆசை வெற்றி பெற்றாலும் யஜீதின் ஆட்சி நீடிக்கவில்லை" என்று வரலாற்றாசிரியர் இப்னு ஹல்லிகான் கூறுகிறார்.

ஆட்சி என்று பார்க்கும்பொழுது உமைய்யாக்களின் ஆட்சி திறமை வாய்ந்ததாய் விளங்கியது உண்மைதான். ஆட்சி பரந்து விரிந்தது. முஸ்லிம்கள் பல நாடுகளை வென்று வெற்றிமேல் வெற்றியாகக் குவித்தனர். போரில் கிடைத்த கொள்ளைப் பொருள்களால் அரபு நாடுகளில் செல்வம் கொழித்தது.



முதலாம் மர்வான், அப்துல் மலிக் இப்னு மர்வான் முதலாம் வலீத் இப்னு அப்துல் மலிக், ஆகிய கலீஃபாக்களின் காலத்தில் ஆட்சி நன்முறையில் இருந்தபோதினும் மக்கள் நசுக்கிப் பிழியப்பட்டனர். சிறந்த இராணுவம் கடற்படை ஆகியவை உருவாயின. கலீஃபா வலீதின் காலத்தில் அழகிய கட்டிடங்கள் அழகழகு மாளிகைகள், பள்ளிவாயில்கள் ஆகியவை உருவாயின.

இவர்களின் ஆளுநர்களான ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப், ஸியாத் போன்றோர் மக்களை இரும்புக்கரம் கொண்டு கொன்றொழித்தனர். எனினும் நாட்டில் அமைதி நிலவியது.

உமைய்யாக்களிடம் செல்வம் பெருகவே, அவர்கள் உல்லாச சுக போகங்களிலும், களியாட்டங்களிலும் ஈடுபடத்துவங்கினர்.

ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் ரோஜாப்பூ ஷர்பத் அருந்திக்கொண்டு முந்தைய வரலாற்று நிகழ்ச்சிகளையும், கவிதைகளையும் கேட்டு இன்பப் பொழுது போக்கினார். ஆனால் அதன்பின்னர் வந்த கலீஃபாக்கள் மதுவிலும், இசையிலும் மூழ்கினர். திரைக்கு அப்பாலிருந்து களியாட்டங்களை கண்டு களித்தனர். கலீஃபா வலீதோ நேரடியாகவே மற்றவருடன் சேர்ந்து களியாட்டங்களை அனுபவிக்கத் துவங்கினார்.

வீண் விளையாட்டுகள் அவர்களிடம் பெருகின. குதிரைப் பந்தயத்திற்கென 4000 குதிரைகள் அரசாங்கத் தொழுவத்தில் இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளனர். அது தவிர சேவல் சண்டை, வேட்டையாடுதல் ஆகியவை அவர்களின் பொழுது போக்குகள் ஆயின.

செல்வம் பெருகியதால் கலீஃபாக்களைப் போன்றே அவர்களின் மக்களும், உறவினர்களும் வீண்விளையாட்டுகளில் சமமாக ஈடுபட்டனர். கலீஃபாவின் மகளிடம் பந்தயக்குதிரை இருந்தது. அரசியல் கலை பயில வேண்டிய இளவரசர்கள் நாய்களை வளர்த்தனர். அந்நாய்களின் கழுத்துகளில் பொன்னாலான பட்டைகளை அணிவித்தனர். நாய்களை வேட்டைக்குப் பயன்படுத்தினர்.

ஆட்சியாளர்களிடம் மார்க்கப்பற்று குறையவே. பொது மக்களிடமும் அது குறையலாயிற்று. கலீஃபாக்களிடம் இறையச்சம் இல்லாது போகவே, மக்களிடமும் அது எடுபட்டுப் போயிற்று.

முஸ்லிம்கள் இசையிலும், களியாட்டங்களிலும் மதுவிலும் மூழ்கினர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்து, மறைந்து, அடக்கமாகிய புனித பூமியாகிய மதீனா மாநகரில் இசைக்கச்சேரிகள் ஏராளமாக நடைபெற்றன. கிறித்துவமத இசைவாணர் இராக்கிலிருந்து வந்து மதீனாவில் இசை நிகழ்ச்சி நடத்தினார். அவர் பெயர் ஹுனைன். அவர் மதீனாவில் இசை நிகழ்ச்சி நடத்தியபொழுது, மக்கள் வெள்ளம் பெருகி, அவர்கள் கூரை மீதமர்ந்து அதை ரசித்தார்கள். அப்பொழுது அக்கூரை சரிந்து வீழ்ந்து ஹுனைன் செத்தார், என்று கிதாபுல் அகானீயில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காதற்கவிதைகளுக்கு இஸ்லாத்தில் இடமில்லை. எனினும் உமைய்யாக்களின் ஆட்சியில் அத்தகைய கவிபுனைவோர் பல்கிப்பெருகினர். உமர் இப்னு ராபியா என்னும் கவிஞர் சிற்றின்ப கவிகளை இயற்றினார். மக்கள் அவரது கவிகளில் மூழ்கினர். அவரது கவிதையின் காரணத்தால் ஒரு முறை ஹஜ்ஜுக் கடமைகளை நிறை



வேற்ற வந்தவர்களால் சரிவர அக்கடமைகளை நிறைவேற்ற இயலாமற் போய் விட்டது.

இத்தகைய சூழ் நிலையில் தான் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் கலீஃபாவாகப் பொறுப்பேற்றார்கள். இருளில் தோன்றிய விடிவெள்ளியாகத் தோன்றிய அப்பெரியார் ஆட்சியாளர்களிடையேயும், மக்களிடையேயும் காணப்பட்ட மார்க்கத்திற்கு முரணான செயல்களுக்கோர் முற்றுப் புள்ளி வைத்தார்கள்.

முன்னுண்டான கலீஃபாக்களின் காலத்தில்கட்டிடக் கலை, உணவுக்கலை, இசை, கவிதை, ஓவியம், சிற்றின்பம் ஆகியவற்றைப் பற்றிப் பரவலாகப் பேசி வந்த மக்கள் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் காலத்தில் மார்க்கத்திலேயே மூழ்கினர்.

மக்களை நேர்வழிப்படுத்த அவர்கள் கொண்ட விடா முயற்சியும், கண்டிப்பும், மக்களுக்கும் இஸ்லாமிய சமுதாயத்திற்கும் நல்ல பயனளித்தது. அதற்கான காரணங்கள்:—

1. ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள் தலைசிறந்த கல்விமானாக விளங்கியது.

2. முன்னுண்டான கலீஃபாக்களைப் போன்று சுக போகத்தை விரும்பாது, குலபாயே ராஷிதீன்களைப் பின்பற்றியது.

3. அவர்களிடம் உறைந்திருந்த உண்மை, கட்டுப்பாடு, நேர்மை, அனைத்திற்கும் மேலான இறையச்சம்.

உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் காலத்தில் மக்கள் மார்க்கத்தைப் பற்றிப் பேசிக்கொண்

டனர். தீனுடைய செயல்களில் பெரும் ஆய்வுகளை மேற் கொண்டனர். மக்களிடையே வணக்க வழிபாடுகள் வேரூன்றின.

எனினும் இத்தகைய இறைபருள் மறுமலர்ச்சி சிறிது காலத்திற்கே நிலைத்து நின்றது. உமைய்யாக்கள் திட்டமிட்டு ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களை நஞ்சூட்டிக்கொன்றனர். அதன்பின்னர் வந்த கலீஃபாக்கள் மீண்டும் உல்லாச வாழ்க்கையைத் துவக்கினர். மீண்டும் அனைத்துத் தீமைகளும் அவர்களிடம் வந்து சேர்ந்தன. அவர்கள் கொடுங்கோலர்களாக இருந்ததால் மக்களின் எதிர்ப்புக்கு ஆளாயினர்.

அப்பொழுதுதான் அப்பாஸிகளின் எதிர்ப்பு உருவாயிற்று. அப்பாஸிகள் புரட்சிசெய்து அதில் வெற்றி பெற்றனர்.

உமைய்யாக்களின் இறுதிமன்னர் இரண்டாம் மர்வான் அப்பாஸிகளிடம் தோற்று எகிப்து நோக்கி ஓடினார்.

அப்பாஸிகள், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பெரியதந்தை அப்பாஸ் (ரலி) அவர்களின் வழித் தோன்றல்களாவர்.

அப்பாஸ் (ரலி) அவர்களின் கொள்ளுப்பேரர் முஹம்மது என்பவர் முதன் முதலாக உமையாக்களை எதிர்த்து ஹிஜ்ரி 125இல் இறந்தார்.

அவரின் மகன் இப்ராஹீம், உமையாக்களுக்கு எதிராக புரட்சிக் கொடிதூக்கியதால் கலீஃபா இரண்டாம் மர்வானால் சிறைசெய்யப்பட்டார்.



இபுராஹீமின் இரு சகோதரர்களான அபுல் அப்பாஸ் (அஸ்ஸப்பாஹ்) அபூஜஃபர் (அல் மன்சூர்) ஆகிய இருவரும் அப்பாஸிகளுக்குத் தலைமை தாங்கி ஹிஜ்ரி 132 இல் கூஃபாவைக் கைப்பற்றினர்.

அப்பொழுதுதான் கடைசி உமைய்யா கலீஃபா இரண்டாம் மர்வான், தப்பி எகிப்துக்கு ஓடினார். எகிப்தில் பூஸீர் என்னும் இடத்தில் அவர்கொல்லப்பட்டார். அவரது தலை அபுல் அப்பாஸிடம் வெற்றிச் சின்னமாக அனுப்பி வைக்கப்பட்டது. இத்துடன் உமைய்யாகிலாஃபத் முற்றுப்பெற்றது. அது கி. பி. 750 ஆண்டு ஆகும்.

ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களுக்கு நஞ்சூட்டிக் கொலை செய்த உமைய்யாக்களை அல்லாஹ் அத்துடன் விடவில்லை.

அப்பாஸிய்யத் தளபதி அப்துல்லாஹ், உமைய்யாக்களின் உறவினர்கள் ஒருவரையும் விடாதுக் கொன்றொழிக்கத்திட்டமிட்டார். கி.பி. 750 ஆம் ஆண்டு 25ம் நாள் அபூ ஃபுத்ரஸ் என்னும் இடத்தில் விருந்தொன்று வைத்து, அதற்கு உமைய்யாக்களின் அரசப் பரம்பரையினர், உறவினர்கள் ஆகிய எண்பது பேரை அழைத்து அதன் மூலம் நஞ்சூட்டி, அவர்களைக் கொன்றொழித்தார். அவர்களுள் ஒருவர் மட்டும் தப்பிச் சென்று அந்துலுஸில் (ஸ்பெயினில்) ஆட்சியை நிறுவினர்.

ஆக, ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களை நஞ்சூட்டிக் கொன்ற உமைய்யாக்கள், ஹஜ்ரத் உமர் அவர்கள் இறந்து முப்பது ஆண்டுகள் கழித்து பெருங்கூட்டமாக வைத்து அப்பாஸிகளால் நஞ்சூட்டிக கொல்லப்பட்ட வரலாறு, இங்கே வல்ல ரஹ்மானின் நீதியை நமக்கு உணர்த்த வில்லையா?

உமைய்யாக் கலீஃபா யஜீதின் ஆட்சியில் தானே இமாம் ஹுசைன் (ரலி) அவர்களும், அவர்களின் குடும்பத்தினரும் கொல்லப்பட்டனர்.

இப்பொழுது அப்பாஸிகள் உமைய்யாக் கலீஃபாக் களின் புதைகுழிகளைக்கூட விடாதுத் தோண்டி ஆங்கிருந்த எலும்புகளை வீசியெறிந்தனர். எனினும் ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் கப்ரை அவர்கள் நன்முறையில் காத்தனர்.

''ஹல் ஜஸாவுல் இஹ்ஸானி இல்லல் இஹ்ஸான்.''

''நன்மைக்குரிய கூலி நன்மையே அன்றி வேறுண்டோ?'' (திருக்குர்ஆன்) (55 : 60)